பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 14 புதன்கிழமை (27.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :152

# புலிகள் தொடர்பான பார்வை ஐரோப்பிய நாடுகளில் மாற்றம்

## சாதகமான போக்குத் தென்படுவதாக தமிழ்ச்செல்வன் கருத்து

கிளிநொச்சி,ஏப்ரல் 27

**விடுதலைப் புலிகள் தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் முன்னர் கொண்டிருந்த கருத்துக்களில் அண்மைக்காலமாக மாற்றம் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன எனத் தெரிகின்றது.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்த விடயம் அதிகளவில் அவதானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.**

"கடந்த காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு நாம் சென்றபோது அங்கு அதிகார மட்டத்தின் கீழ் மட்டத்திலுள்ளவர்களைச் சந்திக்கவே எமக்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால், இம் முறை அந்தந்த நாடுகளின் அரசுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் நிலைத் தலைவர்களைச் சந்தித்து எமது பிரச்சினைகளை விளக்கமுடிந்தது. இது ஒரு சாதகமான மாற்றம்" - என்றார் தமிழ்ச்செல்வன்.

இலங்கை அரசு கூறுபவற்றைக் கேட்டு தம்மை மதிப்பிட்டு வந்த ஐரோப்பிய நாடுகள் கடந்த காலங்களில் நாம் அங்கு சென்றபோதெல்லாம் தம்மிடம் அதிகளவில் கேள்விகளைக் கேட்டதாகவும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

# மேல்மாகாண சபை ஒத்திவைப்பை கடுமையாக எதிர்க்கிறது ஜே.வி.பி.

கொழும்பு. ஏப். 27

மேல்மாகாண சபை அமர்வுகள் மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதை அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்துள்ளது. முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படுவதையும் அது முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது. விசாரணைகள் ஏதும் இன்றியே அவர் பதவி விலகவேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று மேல்மாகாணசபையில் விவாதிக்கப்பட இருந்த சூழ்நிலையில் மாகாண ஆளுநர் சபை அமர்வுகளை மூன்று வார காலத்திற்கு ஒத்திவைத்தார். மாகாண முதலமைச்சருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக விசேட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படுமென்றும் அவர் அறிவித்திருந்தார்.

ஆனாலும், இது தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த மேல்மாகாண சபையின் ஜே.வி.பி. உறுப்பினர் குழுவின் தலை

(16ஆம் பக்கம் பார்க்க)

# 3 வாரத்துள் தீர்வில்லையேல் மேல்மாகாணசபை கலைப்பு?

## இல்லையேல் மேலும் ஒத்திவைக்க ஜனாதிபதி பரிசீலனை

கொழும்பு.ஏப்.27

மேல்மாகாணசபை அமர்வுகள் மூன்று வாரகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளநிலையில், முதலமைச்சர் தொடர்பான பிரச்சினைக்கு இந்தக் காலப்பகுதிக்குள் தீர்வுகாணப்படாத பட்சத்தில் சபை அமர்வுகளை மேலும் ஒத்திவைப்பதற்கு அல்லது மாகாண சபையைக் கலைத்து விடுவதற்கு ஜனாதிபதி தீர்மானமொன்றை எடுப்பாரென்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் நேற்றுக் கூறின.

மாகாண முதலமைச்சர்கள் சிலரை அழைத்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

## தயாமோகன் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு.ஏப்.27

மட்டக்களப்பு, பட்டிருப்புப் பாலத்தில் வைத்து நேற்று நண்பகல் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகனும் அவரது உதவியாளரும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் நீதிமன்றினால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள களுவாஞ்சிக்குடிக்குச் செல்வதற்காக அவர்கள் கொக்கட்டிச்சோலையிலிருந்து கார் ஒன்றில் வந்தனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் முன்னணிச் சோதனை நிலையம் அமைந்துள்ள பட்டிருப்புப் பாலத்தில் பொலீஸார் அந்த வாகனத்

(16ஆம் பக்கம் பார்க்க)



தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வுகளில் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.பத்மநாதன் நினைவுச்சுடரை ஏற்றுவதையும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 2[illegible])

## மண்முனையில் போராளி கைது

மட்டக்களப்பு.ஏப்.27

மண்முனை, இறங்குதுறையில் 'சயனைட்'டுடன் நடமாடினார் எனக் கூறப்படும் போராளி ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். கொக்கட்டிச்சோலையில் இருந்து படகுச் சேவை (Ferry) மூலம் மண்முனை

(16ஆம் பக்கம் பார்க்க)

## அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு.ஏப்.27

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு மூன்றாவது தடவையாக நேற்றும் இடம்பெறவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## போதையில் நீதிபதி வாகனம் மீது மோதிய நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்.ஏப்.27

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியின் வாகனம் மீது போதையில் வந்து மோதினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி நேற்றுமுன்தினம் தமது வாகனத்தில் நகரின் பிரதான

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை; சிங்களவர் ஒருவர் கடத்தப்பட்டார்

## பொலன்னறுவை, கரப்பொலவில் சம்பவம்

ஏறாவூர்.ஏப்.27

பொலன்னறுவை மாவட்டத்தின் கரப்பொல கிராமத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இனந்தெரியாத ஆயுததாரிகளால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பொலன்னறுவைப் பொலீஸார் இத்தகவலைத் தெரிவித்தனர். கொல்லப்பட்ட இளைஞருடன் இருந்தவர் எனக் கூறப்படும் சிங்களவர் ஒருவரை அந்த ஆயுததாரிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. செல்லத்துரை கோபாலகுமார் (வயது-22) என்ற இளைஞரே சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

கே.ரணதுங்க ஏன்ற சிங்கள இளைஞரே

(16ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டைப் பிரிக்க பொதுக்கட்டமைப்பு வழி ஏற்படுத்தும் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு.ஏப்.27

விடுதலைப் புலிகளிடம் பொதுக்கட்டமைப்பை வழங்குவது நாட்டைப் பிளவுபடுத்திவிடும். புலிகள் தொடர்பில் எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கமுடியாத சர்வதேச சமூகம் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை வழங்கக் கோருவதில் எந்தவித நியாயமும் இல்லை.

- இப்படி அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் செய்தியாளர் மாநாடொன்றை இலங்கை மன்றக் கல்லூரியில்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயரட்ணத்தை மீட்டுத்தருமாறு மனைவி புலிகளிடம் கோரிக்கை

கொழும்பு ஏப். 27

கொழும்பில் அண்மையில் காணாமற்போன புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் ரீ.ஜெயரட்ணத்தை மீட்டுத்தருமாறு அவரது மனைவி விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அவர் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியுள்ளார். செஞ்சிலுவைக் குழு இதனை உறுதிசெய்துள்ளது.

இதுதொடர்பிலான வேண்டுகோளைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் தாம் முன்வைத்துள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேச குழு தெரிவித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பிரான்ஸ் பல்கலைக்கழக மருத்துவர் வைத்தியர் டொமினிக் றூகட் தலைமையிலான குழுவினர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தலைமையிலான குழுவினரை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: பிரபா)

### தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரியில்

# 'கோபால்ற்' யுனிற் உபகரணங்கள் பொருத்துதல்; பிரான்ஸ் மருத்துவக்குழு நேற்று யாழ். வந்தது

குருநகர்,ஏப்.27

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் பொருத்தப்படவுள்ள 'கோபால்ற்' யுனிற் உபகரணங்கள் தொடர்பான வேலைகளைத் திட்டமிடும் நோக்குடன் பிரான்ஸ் மருத்துவக் குழு உறுப்பினர்கள் நால்வர் நேற்றுக் கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து, யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

பிரான்ஸ் பல்கலைக்கழக மருத்துவர் டாக்டர் டொமினிக் றூகட் தலைமையில் வந்த இக்குழுவில் செல்வி வலோயின் வவுவோ (தலைமைத் தாதி), டாக்டர் எறிக் லிகுவ் (புற்றுநோய் வைத்தியர்), டாக்டர் மத்தியு லக்கும்புறே (உளவியலாளர்) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியர் டாக்டர் செல்வி சிவராணி, பேராசிரியர் எஸ்.சுந்தரலிங்கம், புற்றுநோய் நிபுணர் டாக்டர் எஸ்.ஜெயக்குமார், உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். சிவராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் இன்று புதன்கிழமை காலை தெல்லிப்பழையில் அமையவுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு நேரில் விஜயம் செய்யவுள்ளதுடன, யாழ். போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்யவுள்ளனர். (எ-51)

# ஆழிப்பேரலையில் இறந்த அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்க சுற்றறிக்கை கிடைத்தது

தென்மராட்சி.ஏப்.27

சுனாமி கடல் கொந்தளிப்பினால் மரணித்த அல்லது காணாமற்போன நிரந்தர அரச ஊழியர்களில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணம் வழஙகப்படவுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

மரணித்த அல்லது காணாமற்போன அலுவலர் உயிர்வாழ்ந்துகொண்டு சேவையில் இருந்திருந்தால் அவருக்கு இடையிடையே கிடைக்கக் கூடியதாக இருந்த சம்பள அதிகரிப்புகளும் படிகளும் அடங்கலாக அவர் மரணித்துவிட்ட அல்லது காணாமற்போன திகதியில் அவருக்குச் செலுத்தப்பட்ட முழுச் சம்பளத்தையும் படியையும் அவர் உயிர் வாழ்பவராகக் கருதி 55 வயது வரை தங்கிவாழ்பவருக்கு வழங்குதல வேண்டும்.

தங்கி வாழ்பவர்களாக கருதப்படுவது அலுவலர் விவாகமாகியிருந்தால் வாழ்க்கைத துணை வரும், வாழ்க்கைத் துணைவர் மரணித்திருநதால் 26 வயதுக்கு குறைந்த விவாகமாகாத பிள்ளைகளும் ஆவர்.

அலுவலர் விவாகமாகாதவராயின் தாய், தந்தையும், தாய் தந்தை இருவரும் மரணித்திருந்தால் 26 வயதுக்கு குறைந்த அவரின் விவாகமாகாத சகோதரர்களும், தொழில் இல்லாத விவாகமாகாத சகோதரிகளும் ஆவர்.

மேற்படி சுற்றறிக்கையின் கீழ்தங்கி வாழ்பவர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை அறவிடக்கூடாது எனவும் -

காணாமற்போன அல்லது மரணித்த அலுவலர் சார்பில் 1993.09.23 ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 22/93 ஏற்பாடுகளின் படி திடீர் விபத்து நஷ்ட ஈடுசெலுத்துவதாக இருந்தால் இம் முறையின் கீழ் சம்பளம் பெறுவதற்கு தங்கி வாழ்பவர்கள் உரித்தற்றவர்கள் ஆவர் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-117)

# ஊர்காவற்றுறையில் இன்று அரச அலுவலர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் உத்தியோகத்தர்களுக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அரச அலுவலர் விடுதி இன்று புதன்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் சமயக் கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் அரச அலுவலர் விடுதியை வைபவரீதியாகத் திறந்துவைப்பார்.

தூர இடங்களில் இருந்து வருகைதரும் அரச அலுவலர்கள் தங்கிநின்று கடமையை நிறைவேற்றக் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்ட இந்த விடுதியில் சகல வசதிகளும் கொண்ட அறைகள், கலந்துரையாடல் மண்டபம் மற்றும் இன்னோரன்ன வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் கூறினார்.

பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அரச அலுவலர் விடுதி, நண்டகாலமாகத் தீவுப்பகுதி அரச அலுவலருக்கு இருந்துவந்த பெரும் சிரமங்களை நிவர்த்தி செய்துள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## முன்பள்ளி திறப்பு விழா

தென்மராட்சி,ஏப்.27

புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட மட்டுவில் தெற்கு, சோமஸ்கநதா முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும் கிராம அலுவலர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சீமாட்டி மேரி சிகான், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் மற்றும் நிறுவன உயர் அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ-117)

## தமிழர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மே தினம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

இதில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட சகல கிளைகளினதும் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர் மற்றும் தாய்ச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-7)

# உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் நீர் விநியோகம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.27

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள குடிதண்ணீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் குறித்த மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். பொதுநூலகத்தில் நடைபெற்றது.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் வடபிராந்திய பிரதம பொறியியலாளர் ரி.பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குடாநாட்டில் குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக ஆய்வுசெய்யும் பணி கடந்த மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்றும் -

இப்பணியை ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றும் இலங்கை நிறுவனம் ஒன்றும் மேற்கொண்டுவருகின்றது என்றும் இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. 9 மாதங்கள் வரை இந்த ஆய்வுகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் பளை, பூநகரி ஆகிய இரு பிரதேசங்களையும் இத்திட்டத்தில் உள்வாங்குவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (த-7)



தந்தை செல்வாவின் 28ஆவது நினைவுதின நிகழ்வின் [illegible] மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் உரைநிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம்,ஏப்.27

நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய சம்பத்சர பிராயச்சித்த பிரமோற்சவ விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்கல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (எ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.27

காரைநகர், கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹா கும்பாபஷேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு சாயரட்டைப் பூசையைத் தொடர்ந்து திருக்கல்யாணம் நடைபெற்று எம்பெருமான் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (எ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.27

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (எ-203)

## 'ஏபி' பொசிட்டிவ் இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம்,ஏப்:27

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஏபி' பொசிட்டிவ் (AB+) இரத்தம் அவசரம் தேவைப்படுவதால் இந்தவகை இரத்தம் உடையவர்கள் உடனடியாக வந்து இரத்ததானம் செய்யுமாறு இரத்தவங்கி அதிகாரியால் கோரப்பட்டுள்ளது.

இந்தவகை இரத்தமுடையவர்கள் இதற்கு முன்னர் இரத்தம் வழங்கியிருந்தால், வழங்கி நான்கு மாதங்கள் நிறைவுபெற்றிருப்பவர்களும் இரத்த வங்கிக்கு சமுகமளித்து இரத்ததானம் செய்யலாம் என வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

## பிரிவுபசார விழா

சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றி இளைப்பாறியும், இடமாற்றம் பெற்றும் சென்ற ஆறு உத்தியோகத்தர், ஊழியர்களுக்கான பிரிவுபசார விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நகரசபையின பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்படும் இவ்விழா சங்கத் தலைவர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். கணக்காளர் செல்வி ஆ.ஞானதேவி, எழுதுநர் திருமதி கௌ.விக்னகுமார், பொதுநூல் நிலையங்களில் கடமையாற்றிய இ. தர்மலிங்கம், சி.சிவசோதிலிங்கம், சி.தவராசசிங்கம், ஆ.இராமநாதன் ஆகியோருக்கு பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் சி.இரகுநாதன் தெரிவித்தார். (எ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் விசேட மருத்துவ முகாம்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் விசேட மருத்துவ சிகிச்சை சேவை நேற்று ஆரம்பமாகியது. இது அடுத்தமாதம் மூன்றாம் திகதி வரை நடைபெறும். பிரிட்டனைச் சேர்ந்த முறிவு மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நல்லைநாதன் இந்த இலவச மருத்துவ சேவையினை வழங்கி வருகிறார். பொதுமக்கள் தினமும் காலை 9மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை இச் சேவையினைப் பெறமுடியும் என வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (எ-117)

# காஷ்மீர் பிரச்சினை விரைவில் தீரும் பாக். ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிக்கிறார்



இஸ்லாமாபாத்,ஏப்.27

காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் நாள் தொலைவில் இல்லை என்பது தெளிவாகியுள்ளது என பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு 8 நாள் விஜயத்தை மேற்கொண்ட முஷாரப், பாகிஸ்தான் செல்வதற்கு முன்னதாகச் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் செய்தியாளர்களுக்குத் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் நடைபெற்ற கிரிக்கெட் பந்தயத்தைப் பார்வையிட்ட நான், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தினேன். பேச்சுக்கள் நடத்திய பின்னர் கூட்டறிக்கையொன்றையும் நாம் வெளியிட்டோம்.

அவரோடு நடத்திய பேச்சுக்களின் பின்னர் காஷ்மீர் பிரச்சினைக்கு நல்ல தீர்வொன்று ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கேற்பட்டுள்ளது.

அமைதிப் பேச்சுக்களில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் எனப் பிரதமர் மன்மோகன் சிங்கும் உறுதியளித்தார்.

அத்துடன், இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய - ஆபிரிக்க மாநாட்டிலும் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வுகாண விரும்புவதாக அனைத்துத் தலைவர்களும் உறுதியளித்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் நிலவி வரும் காஷ்மீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பிரதமர் மன்மோகன் சிங் விசுவாசமாக இருப்பதை நான் அவருடன் கலந்துரையாடியபோது நேரில் கண்டேன் என்று அவர் கூறினார். (க)

# விரைவில் ஈராக்கில் புதிய அரசு

பக்தாத்,ஏப்.27

ஈராக்கில் புதிய அரசு ஒன்று அமைக்கப்படவுள்ளது. நேற்றுமுன்தினம் புதிய அரசு ஒன்று அமைக்கப்படவிருந்தபோதிலும் அது ஒத்திவைக்கப்பட்டது.

அமைச்சரவை நியமனங்களை அறிவிப்பதில் அரசியல் கட்சிகளில் நிலவிய தாமதமே அரசாங்கம் அமைப்பு ஒத்திவைக்கப்பட்டதென அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் பொதுத் தேர்தலில் ஷியா முஸ்லிம்களின் தேசியக் கூட்டணி வெற்றிபெற்றது.

குர்திஷ் முஸ்லிம்களின் கட்சிகளையும் சுனி முஸ்லிம்களின் கட்சிகளையும் ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு அரசு ஒன்றை அமைகக்த் தேசியக் கூட்டணி எதிர்பார்க்கின்றது.

இதன்படி, 32 அமைச்சுக்களில் 17அமைச்சுக்களை ஷியா தேசியக் கூட்டணிக்கு ஒதுக்க வேண்டும் என்றும் -

குர்திஷ் பிரிவினருக்கு 8 அமைச்சுக்களை ஒதுக்கவேண்டும் என்றும் -

ஏனைய அமைச்சுக்களை சுனி முஸ்லிம் பிரிவினருக்கு வழங்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஈராக் பாதுகாப்பு அமைச்சையும் - பெற்றோலிய அமைச்சையும் எந்தக் கட்சிக்கு வழங்குவது என்று இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

# பலஸ்தீனத்தைக் கட்டியெழுப்ப சவூதி அரேபியா உதவவேண்டும்

## இளவரசர் அப்துல்லாவிடம் புஷ் வேண்டுகோள்

வாஷிங்ரன்,ஏப்.27

பலஸ்தீனத்தைக் கட்டியெழுப்ப சவூதி அரேபியா பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும் என சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் அப்துல்லாவிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் அப்துல்லாவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷுக்கும் இடையிலான சந்திப்பின்போதே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும், பலஸ்தீனத்தைக் கட்டியெழுபப சவூதி அரேபியா பொருளாதார உதவிகளை வழங்கவேண்டும்.

காஸா கரையோரப் பகுதியில் இருந்து இஸ்ரேல் வாபஸ் பெற்ற பின்னர் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருளாதார உதவிகளைச் சவூதி அரேபியா வழங்குவது சிறந்த செயலாகும் என்றும் - அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதியின் திட்டத்திற்கேற்ப பலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேல் படையினர் வாபஸ் பெற்றால், அரபு நாடுகள் மத்தியில் ஒரு திருப்திகரமான நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று ஆண்டுகளின் பின்னர் இருவருக்கிடையிலான முதலாவது சந்திப்பில் சர்வதேச எரிபொருள் எண்ணெயின் விலையுயர்வு மற்றும் சர்வதேசப் பயங்கரவாதச் செயல்கள் என்பன குறித்துப் பேச்சுகள் நடத்தப்பட்டன.

# பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் ஈராக் போருக்கு முக்கிய இடம்

## எதிர்க்கட்சிகள் தூக்கிப் பிடித்து விளாசல்

லண்டன்,ஏப்.27

பிரிட்டனில் அடுத்தமாதம் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக்கட்டத்தில் 'ஈராக் மீதான போர்' விவகாரம் எதிர்க்கட்சிகளால் தூக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் முக்கியமான வாதப்பொருளாகவும் மாறியிருக்கிறது. அத்தோடு, ஈராக் மீதான போர் சர்வதேச மட்டத்தில் சட்டரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று பிரிட்டனின் அரச வழக்கறிஞர் அரசிற்கு ஆலோசனை கூறியுள்ளார் எனவும் -

ஆனால், அரச தரப்பில் இருந்துவரும் கடுமையான அழுத்தம் காரணமாக அவர் பின்னர் தனது மனதை மாற்றிக்கொண்டார் எனவும்-கடந்த ஞாயிறன்று வெளியான பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், வேண்டுமென்றே எதிர்க்கட்சிகள் இவ்விடயத்தைத் தற்போது தூக்கிப்பிடிப்பதாகக் குற்றஞ் சாட்டினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற ஆசனங்களின் அடிப்படையில் மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியாகவுள்ள லிபரல் டெமோக்கிரட்டிக், ஆரம்பம் முதலே ஈராக் மீதான போரை எதிர்த்து வருகின்றது.

போருக்குச் செல்வதற்கான காரணத்தை நியாயப்படுத்த பிரிட்டன் அரசால் கூறப்பட்ட உளவுத் தகவல்கள் குறித்துப் பொது விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர் சார்ள்ஸ் கென்னடி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக் மீதான போருக்கு கொன்சர்வேட்டிவ் கட்சி தனது ஆதரவை வழங்கியிருந்த போதிலும், பிரதமர் பிளயரின் நேர்மையை அக்கட்சி குறைகூறி வருகிறது. அவரால் முன்வைக்கப்பட்ட உளவுத்தகவல்கள் குறித்து அக்கட்சியின் தலைவர் மைக்கல் ஹவார்ட்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் நேபாளத்தில் பத்துப் பேர் உயிரிழப்பு!

காத்மண்டு,ஏப்.27

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் நடத்திய இரு வெவ்வேறு தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரூபன்தேஹி மாவட்டத்தில் மார்ச்வார் பகுதியில் மாவோ தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உள்ளூர் காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட நான்கு கட்சித் தொண்டர்கள் கொலை செய்யப்பட்டனர் என்றும் -

ருகும் மாவட்டத்தில் தங்கிய பகுதியில் பொதுக்குழாய் ஒன்றுக்கு அருகில் மாவோ தீவிரவாதிகள் புதைத்துவைத்திருந்த குண்டு வெடித்ததில் 5 குழந்தைகள் உயிரிழந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட இந்தக் கொடூரச் சம்பவங்கள் மன்னராட்சி ஏற்பட்டதன் பின்னரும் சட்ட ஒழுங்குகள் இன்னும் சீரடவிலலை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன என நேபாளி காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ரோல்பா மாவட்டத்தில் மாவோ தீவிரவாதிகளின் பதுங்குகுழிகளையும் ஆதவாளர்களின் வீடுகளையும் அடையாளம் காணும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் - சந்தேகத்துக்குரியவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுகின்றனர் என்றும் -

இந்தப் பணிக்கு நேபாள விமானப் படையினர் உதவி வழங்கிவருகின்றனர் என்றும் - நேபாள பாதுகாப்புப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

மன்னர் ஜியானேந்திரா மாவோ தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக போதைப் பொருள் வியாபாரி அமெரிக்க எல்லையில் கைது!

வாஷிங்ரன்,ஏப்.27

உலகில் மிகப் பிரபலமான போதைப் பொருள் வியாபாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பஷிர் நூர் ஷாய் எனப்படும் போதைப்பொருள் வியாபாரியான அவர் அமெரிக்காவின் எல்லைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வருடாந்தம் அவர் ஏற்றுமதி செய்யும் ஹெரோயின் எனப்படும் போதைப்பொருளின் பெறுமதி மட்டும் சுமார் 5 கோடி அமெரிக்க டொலர்கள் என்றும் -

போதைப் ·பொருள் வியாபாரியான பஷீர் அமெரிக்க உள்ளூர் நீதிமன்றத்தில் - ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் - எல்லைப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

உலகின் பிரபல போதைப்பொருள் வியாபாரியான பஷீரை விரைவில் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் !.பிள்யூ.புஷ் கடந்தவருடம் உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் பஸ் விபத்தில் 5 பேர் மரணம்; 50 பேர் காயம்

தென் பங்களாதேஷின் தங்காயில் மாவட்டத்தில் பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்; 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என பங்களாதேஷ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைநகர் டாக்காவில் இருந்து 72 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. முன்னால் சென்று கொண்டிருந்த வண்டியை முந்திக்கொண்டு பஸ் செல்ல முயன்றபோதே மேற்படி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் சாரதியும் இந்த விபத்தில் உயிரிழந்தார் என்றும் -

காயமடைந்த ஏனையோரைத் தலைநகருக்கு தென் குர்க்ரா நகரில் உள்ள வைத்தியசாலை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்விபத்துக் குறித்த விசாரணைகளை தங்காயில் மாவட்ட பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சோவியத் யூனியன் உடைந்துபோனமை பேரிழப்பாகும் என்கிறார் ரஷ்ய ஜனாதிபதி

மொஸ்கோ,ஏப்.27

சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்துபோனமை ஒரு பேரிழப்பாகும் என்கிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

இதன்மூலம் பல லட்சக்கணக்கான ரஷ்யப் பிரஜைகள் ரஷ்யாவுக்கு வெளியே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

தன்னுடைய வருடாந்த உரையிலேயே புடின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆனால், இது அந்தக் காலத்தின் இனிமையான நிகழ்வு எனவும், சோவியத் யூனியனின் கௌரவம் இழந்துபோனது குறித்து பல ரஷ்யர்களுக்கும் இதேபோன்ற எண்ணம் உள்ளது என்றும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த உரையின்போது அவர் மேலும் கூறுகையில், "ரஷ்யாவிற்கு இப்பொழுது உள்ள மிகப்பெரிய சவால் ஜனநாயக வளர்ச்சிதான்" என்று தெரிவித்தார்.

நியாயமான வகையில் நடந்துகொள்ளும் ஊடகங்கள் உருவாகுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறிய புடின், வர்த்தகததை - வியாபாரத்தை - எச்சரிக்கும் அதிகாரிகளை அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால், ரஷ்யாவில் ஜனநாயக மாற்றத்தின் வேகத்தை ரஷ்யாவே தீர்மானிக்கும் என்பதை அவர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறினார்.




# சிறைக்கைதிகளின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகரித்துள்ளது

## அந்த நாட்டின் நீதித்துறை தகவல்

வாஷிங்ரன்,ஏப்.27

அமெரிக்காவில் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டு நீதித்துறை அறிவித்துள்ளது. அது வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்திலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்காவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை தற்போது 21 லட்சத்து 31 ஆயிரத்து 180ஆகும். கடந்த 2003ஆம் ஆண்டைவிட இது 23 சதவீதம் அதிகமாகும். ஆண்டுதோறும் [illegible] கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. விடுவிக்கப்படும் கைதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் மூன்று ஆண்டுகளில் மீண்டும் சிறைக்கு வந்துவிடுகின்றனர்.

ஒரு கைதியைச் சிறையில் பராமரிக்க ஆண்டொன்றுக்கு இலங்கை நாணயத்தில் சுமார் 19 லட்சத்து 80ஆயிரம் ரூபா செலவிடப்படுகிறது. அத்தோடு, 12 ஆயிரம் பெண் கைதிகளின் எண்ணிக்கை 2.9 சதவீதம் உயர்ந்து வருகிறது. 2 லட்சத்து 83 ஆயிரம் மனநிலை பாதிக்கப்பட்டவர்களும், 92 ஆயிரம் வெளிநாட்டவர்களும் அமெரிக்க சிறைகளில் தண்டனை அனுபவித்துவருகின்றனர் - என்றுள்ளது.

சிறைச்சாலைக்குப் பதிலாக மாற்றுவழியொன்றை கண்டுபிடிக்கவேண்டும் என்று அமெரிக்க நீதித்துறைக் கொள்கை நிலையத்தின் பேராசிரியர் ஜெய்சன் ஜீடன்பர்க் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இலக்கம் பதியப்படாத இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ காந்த், 314, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம். (44664)

உமிக்கரி விற்பனைக்குண்டு. தோட்டம், வயல்களுக்கு நல்ல உரம் தேவையானவர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தாவடி தெற்கு, கொக்குவில் T.P.: 021 222 6658 தி.இராசரத்தினம். (44639)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் வடக்குச் சந்தியிலிருந்து நிலாவரைக்குச் செல்லும் வீதிக்கு அண்மையாக ஈவினையில் 52 பரப்பு நீள் சதுரக் வெற்றுக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னத்துரை செல்வரத்தினம், 'தாயகம்' ஈவினை, புன்னாலைக் கட்டுவன். (44663)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய வரினா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.07, கொக்குவில் கிழக்கு, கருவேலடி லேன், கொக்குவில், யாழ்ப்பாணம். (44644)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம்.(Electroinic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44423)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் -1 பகிரா, புறொயிலர் குஞ்சுகள் 27-04-2005 புதன்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. P.ரவி, துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. ராதா, மாவடி, வட்டுக்கோட்டை. கௌரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். T.P.No.: 2223529, 2222867. (44636)

## தவறிவிட்டது

22.04.2005 வெள்ளிக்கிழமை மருதனார் மடச் சந்திக்கும் சங்கானைக்கும் இடையில் கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வ.பத்மநாதன் (பொனனுக குட்டி) காளிகோயிலடி, சங்கானை. (44680)

## இமயம் நாடக நூல்

சனிக்கிழமை வானொலியில், அவசரக் கல்யாணம், நாடகம் கேட்டீர்களா? 400 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 11 நாடகங்கள் கொண்ட நூல் இமயம்.(44621)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (எ.42495)

## மணமகள் தேவை

யாழ.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 39 வயது, உயர்நிலைக் கனேடியப் பட்டதாரிக்கு 29 - 33 வயதிற்கு இடைப்பட்ட மணப்பெண் தேவை. மணமகன் கனேடியக் குடியுரிமை பெற்றவர் (தென்மராட்சி விரும்பத்தக்கது). தொடர்பு: திருமதி இ.சரவணமுத்து, திருமதி த.சின்னையா பிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.: 077-9084848 aasai 33@yahoo.ca (44586)

யாழ்.Non RC கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979இல் பிறந்த, 5'5" உயரமுடைய, லண்டனில் தனியார் கம்பனியில் வேலை செய்யும் மணமகனுக்கு படித்த, அழகிய, ஆங்கில அறிவுடைய மணமகள் தேவை. தொடர்பு: T.P. 0214591241. (44633)

## வேப்பம் பூ தேவை

தரமான வேப்பம் பூ நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும் தொடர்புகளுககு: 332, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44640)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள போட்டோ பிரதி இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**துளசி காலணியகம்**
உப்புமடச் சந்தி, கோண்டாவில்.
T.P.: 021 - 4590268
(44649) (21-11-18)

## 15 நிலையங்களில் 'விற்றமின் ஏ' மருந்து

சுகாதார சேவைத் திணைக்களம், 'யுனிசெவ்' என்பவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள 'விற்றமின் ஏ' மருந்து வழங்கும் நிகழ்வு யாழ் மாநகரசபைப் பிரிவில் 15 நிலையங்களில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இந்த மருந்து வழங்கப்படும்.

ஆறு மாதம் முதல் 5 வயதுடைய பிள்ளைகளைப் பெற்றோர் தவறாது அழைத்துச் சென்று 'விற்றமின் 'ஏ' மருந்தை வழங்க வேண்டும் எனவும் - பிள்ளைகளில் உள்ள விற்றமின் ஏ குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. எனவும் - சுகாதார வைத்திய அதிகாரி ம. மரியதாஸ் தெரிவித்துள்ளார். (த-12)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 20.05.2005 for the under mentioned posts.

**Department of Siddha Medicine**

1. Assistant Lecturer (on contract) / Demonstrator (on contract) in Siddha Medicine

| Post | Salary |
|---|---|
| Assistant Lecturer (on contract) | Rs.14,550/- (Fixed) p.m. |
| Demonstrator (on contract) | Rs.12,750/- (Fixed) p.m. |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10c.m in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their spplictions through the Head of respective Institutions. Applictions received after the closing date will be rejected without intimation.

**Registrar**
2005.04.21 (C/42515)(21-

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்திப வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் நாள் (28.04.2005) வியாழக்கிழமை மூல நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 11.07 மணிமுதல் 12.06 மணிக்குள் வரும் கடக லக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
டாக்டர் **றமேஸ்குமார்**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**சகிதா**
அவர்களுக்கும்

நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து புதுமணமக்களை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு .திருமதி டாக்டர் **க.வேலாயுதபிள்ளை,**
"வேல் வைத்தியசாலை"
நீர்வேலி மத்தி.

திரு.திருமதி **கு.கதிர்காமசேகரர்,**
"அம்மனகம்"
மீசாலை கிழக்கு.

(44635) (39-11-18-21)

# Manipal U

## available - accessible - affordable – personalized education

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of Sikkim State Legislature in 1995. Manipal is the nucleus of 53 educational institutions, which has an enrollment of 30,000 students. This includes 2 Universities and 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

The Manipal University has the approval of University Grants Commission and of Common Wealth.

**ADMISSION ANNOUNCEMENT FOR 2005/ 2006**
**MBA / MBA IT**
**Last Date for Enrollment : 30/04/2005**

Now for the first time you have the opportunity of obtaining a prestigious **MBA** at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in *North &East of Sri Lanka*.

### Master of Business Administration (MBA)

The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 01 | Management process and organization behavior | 4 |
| MB 02 | Internet Application | 2 |
| MB 03 | Marketing Management | 2 |
| MB 04 | Human Resource Management | 2 |
| MB 05 | Operation Management | 2 |
| MB 06 | Financial Management | 2 |
| MB 07 | Management Information System (MIS) | 2 |
| | Total Credits | 16 |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 08 | Strategic Technology Management | 4 |
| MB 09 | Management of Technology transfer, absorption & IPR | 2 |
| MB 10 | Business Process, Re-Engineering | 2 |
| MB 11 | Enterprise Resource Planning | 2 |
| MB 12 | e-Customer Relationship Management & Supply Chain Management | 2 |
| MB 13 | Conflict Management & Negotiation Skill | 2 |
| MB 14 | History of Management, Case study | 2 |
| | Total Credits | 32 |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 15 | Infrastructure Management | 2 |
| MB 16 | Fundamentals of Infrastructure Project Financing | 4 |
| MB 17 | Infrastructure Development & Policy Planning | 2 |
| MB 18 | Project Management | 4 |
| MB 19 | Decision Support Systems (DSS) | 4 |
| | Total Credits | 48 |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 20 | Elective | 8 |
| MB 21 | Project | 8 |
| | Total Credits | 64 |

**ELIGIBILITY**
Degree (any discipline) or equivalent professional qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

### Master of Business Administration in Information Technology (MBA IT)

There is a dramatic and immediate need for executives and IT managers who not only understand the strategic use of IT, but also have a strong business orientation and well developed leadership, communications and management skills. That's where our MBA in IT Management can help.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0001 | Management Process & Organization Behavior | 4 |
| MI 0002 | Window based application | 4 |
| MI 0003 | Marketing Management | 2 |
| MI 0004 | Financial Accounting | 2 |
| MI 0005 | Business Applications of IT | 2 |
| MI 0006 | Internet (HTML) | 2 |
| | Total Credits | 16 |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0007 | Human Resource Management | 4 |
| MI 0008 | Visual Basic | 4 |
| MI 0009 | Operations Management | 2 |
| MI 0010 | Financial Management | 2 |
| MI 0011 | C++ | 2 |
| MI 0012 | Oracle | 2 |
| | Total Credits | 32 |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0013 | Management Information System (MIS) | 4 |
| MI 0014 | e-Business and IT law | 4 |
| MI 0015 | Conflict Management & Negotiation Skills | 2 |
| MI 0016 | Software Project Management | 2 |
| MI 0017 | Website Management & Design | 2 |
| MI 0018 | Data Warehousing, Data Mining | 2 |
| | Total Credits | 48 |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0019 | E-CRM & Supply Chain Management | 4 |
| MI 0020 | International Business | 4 |
| MI 0021 | Enterprise Resource Planning | 4 |
| MI 0022 | New Technologies | 2 |
| MI 0023 | Project | 2 |
| | Total Credits | 64 |

**ELIGIBILITY**
Degree or equivalent professional IT qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

www.manipalu.com
**Manipal International Study Center @ IIS City Campus**
# 181, Navaler Road, Jaffna.
Tel: 021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

Sikkim Manipal University India
INSPIRED BY LIFE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கட்டமைப்பு அரசின் இரட்டை வேடப் போக்கு

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளைக் கவனிப்பதற்காக அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான விடயத்தில் அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படுகின்ற விதம் பற்றி கருத்துமுன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரட்டை வேடம் போடுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

தமது கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியினரான ஜே.வி.பியினர் பொதுக்கட்டமைப்பு உருவாகுவதைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றார்கள் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருக்கு நன்கு தெரியும்.

சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளான ஜே.வி.பியினரை எதிர்த்துக்கொண்டு இந்தப் பொதுக் கட்டமைப்பை முன்னெடுக்கும் திராணி ஸ்ரீ.ல.சு.க. தலைவர்களுக்கு இல்லவே இல்லை. அப்படிச் செய்தால் தமது அரசை ஜே.வி.பியினர் கவிழ்த்து விடுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு; அது யதார்த்தமும் கூட.

அதேசமயம், பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டிய நியாயத்தை நன்கு புரிந்துகொண்டு, அதற்காக வலியுறுத்தி வரும் சர்வதேச சமூகத்தை - உதவி வழங்கும் நாடுகளை - பகைத்துக் கொள்ளவோ, எதிர்க்கவோ அரசுத் தலைமைக்குத் திராணியில்லை.

எனவே, இந்த இரண்டு தரப்பினரையும் ஒரே சமயத்தில் சமாளிக்கும் - சந்தோஷப்படுத்தும் - உத்தியே, பொதுக்கட்டமைப்பின் சாதகமான பக்கம் பற்றிய ஸ்ரீ.ல.சு.கட்சியின் தற்போதைய பிரசார நடவடிக்கை என்று சுட்டிக் காட்டுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

ஒருபுறம் - பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்காமல் ஜே.வி.பியைத் திருப்திப்படுத்துவது.

மறுபுறம் - பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான பிரசாரத்தை முன்னெடுப்பதாக வெளிப்படுத்தி, அதன் மூலம் அது விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஆளும்தரப்புத் தீவிரமாக இருக்கின்றது என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக் காலத்தை இழுத்தடிப்பது.

இந்த இரட்டை வேட நாடகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றார் கஜேந்திரகுமார்.

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான விழிப்புணர்வுப் பிரசாரம் என்ற நாடகத்தை சுதந்திரக் கட்சி ஆரம்பித்திருக்க, மறுபுறத்தில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பிரசாரத்தைத் தமது கட்சி உக்கிரப்படுத்து மென ஜே.வி.பி. அறிவித்திருக்கின்றது. எதிர்ப்புப் பிரசாரம் கொழும்பில் ஆரம்பித்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் எனவும், இம்முறை மே தினத்தில் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பே பிரதான விவகாரமாக இருக்கும் எனவும் ஜே.வி.பி. அறிவித்திருப்பது கவனிக்கத்தக்கது.

மறுபக்கத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பிரதான பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான குழப்பம் -முரண்பாடு - இழுபறி - இப்போது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது.

தலைநகரை உள்ளடக்கிய மேல்மாகாண சபை விவகாரத்தில் கூட்டமைப்புக்குள் இணக்கம் காண முடியாத நிலை ஏற்பட்டதால் அரசுத் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அந்த மாகாண சபையின் கூட்டத்தையே மூன்று வாரங்களுக்கு ஒத்திப்போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மாகாண சபையில் தங்களுக்குள் அதிகாரப் பகிர்வு விடயத்தில் எழுந்துள்ள சர்ச்சையை சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில் - ஜே.வி.பியை சமாளிக்க முடியாத இக்கட்டில் - திணறுகின்றது சுதந்திரக்கட்சி.

இந்நிலையில், பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் பெருங்கூடாரமாக இருக்கும் அந்த ஜே.வி.பியைச் சமாளித்துக் கொண்டு சிறுபான்மையினரான தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பு போன்ற விடயத்தில் சிறிதளவாவது நியாயத்தை அந்தக் கூட்டமைப்பு அரசு வழங்கும் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவே.

பேரினவாதிகளின் ஆதரவின்றி அரசைத் தொடர முடியாது என்ற கையாலாகாத்தனத்தில் சிக்கி இருக்கும் இந்த அரசினால் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது என்பது சாத்தியப்படக் கூடியதல்ல.

இந்த அரசு ஆட்சியில் நீடிப்பதாயின் பொதுக்கட்டமைப்பு 'அவுட்'; பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதாயின் இந்த அரசு 'அவுட்'. - இது இன்றைய யதார்த்த நிலை.

தமது அரசைக் கோட்டை விட்டு விட்டு, பொதுக் கட்டமைப்பு என்ற நியாயத்தைத் தமிழர்களுக்கு வழங்க ஜனாதிபதி குமாரதுங்க தயாரா? - தீர்மானம் எடுத்து சர்வதேச சமூகத்துக்கும் புலிகளுக்கும் அவர் பதிலளிக்க வேண்டிய விடயம் இது.

# குடாநாட்டில் 160 நிலையங்களில் குழந்தைகளுக்கு விற்றமின் 'ஏ' மருந்து

## சனியன்று தவறாது பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி 160 நிலையங்களில் குழந்தைகளுக்கான விற்றமின் 'ஏ' வில்லைகள் வழங்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் அனுசரணையுடன் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த குழந்தைகளுக்கு விற்றமின் 'ஏ' சத்து வில்லைகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலுமுள்ள 6 மாதம் முதல் 5 வயது வரையிலான சகல குழந்தைகளுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை விற்றமின் 'ஏ' வில்லைகள் வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்திலும் இதற்கான சகல ஏற்பாடுகளும் தாய்-சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சொலமனின் நெறிப்படுத்தலின் கீழ் பூர்த்தியாகியுள்ளன.

இத்தினத்தில் யாழ்.மாவட்டத்தில் 6 மாதம் முதல் 5 வயது வரையான 49 ஆயிரத்து 380 குழந்தைகளுக்கு 160 நிலையங்களில் விற்றமின் 'ஏ' வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பணியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளைச் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல மருத்துவ மாதர்கள், சுகாதாரத் தொண்டர்கள் - ஈடுபடுவார்கள்.

விற்றமின் 'ஏ' வில்லைகள் வழங்கப்படவுள்ள நிலையங்களின் விவரங்கள் பத்திரிகைகள் மூலம் பின்னர் [illegible]ரப்படும்.

எனவே, பெற்றோர்கள் தா[illegible] மேற்படி வயதெல்லைக்குட்பட்ட குழ[illegible]களை எதிர்வரும் 30 ஆம் திகதி தவற[illegible] இந்த நிலையங்களுக்குக் கொண்டு[illegible] விற்றமின் 'ஏ' வில்லைகளைப் பெ[illegible] கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

சில ஊடகங்களில் யாழ்.மாவ[illegible]தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் இந்நிகழ்ச்சித் திட்டம் நடை பெறுமெனத் தவறாக அறிவிக்கப்பட்டது. உண்மையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் யாழ்.மாவட்டம் முழுவதும் அமுல்படு[illegible]த்தப்படும் என்பதைத் தெளிவுபடுத்த வி[illegible]கிறேன் ஆகியோர் என்று அதில் தெரி[illegible]துள்ளார். (உ[illegible]

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)



தந்தை செல்வாவின் 28 ஆவது நினைவுதின நிகழ்வு நேற்று தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மலர்மாலை அணிவிப்பதையும் பிரமுகர்கள் தூபிக்கு மலரஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:பிரபா)

# தந்தை செல்வாவுக்கு நேற்று நினைவுச் சதுக்கத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.27

தந்தை செல்வாவின் 28 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நேற்று யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்றன.

தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் நிகழ்விற்குத் தலைமை வகித்தார்.

தந்தை செல்வாவின் நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அவரின் உருவச் சிலைக்கு மலர் மாலையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா, தந்தை செல்வாவின் நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சர்வமதப் பிரார்த்தனைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்து குருமார் ஒன்றியத் தலைவர் மகேஸ்வரக்குருக்கள் மற்றும் வண.பிதா ஜெயசேகரம் அடிகளார், தென்னிந்தியத் திருச்சபையின் குரு ஞானவரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அஞ்சலி உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார், மா.க.ஈழவேந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-7)

# உலகவங்கி உதவியுடன் வலி.வடக்கில் வீடமைப்பு

வலி.தெற்கு,ஏப்.27

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உலகவங்கியின் உதவியுடன் 65 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

உலகவங்கியின் ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இப்பிரதேச செயலகத்தில் 65 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. இவ்வீடுகளைக் கட்டுவதற்கென வசாவிளான் கிழக்கு, இளவாலை வடமேற்கு, தெல்லிப்பழை கிழக்கு ஆகிய பகுதிகளில் காணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வீடுகளைக் கட்டுவதற்கான மதிப்பீட்டு வேலைகளும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (த-152)

# காக்கைதீவு விரைவில் நவீன கிராமமாக மாறும்!

## 'யு.என்.டி.பி.' பொறுப்பேற்றது

நவாலி,ஏப்.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த காக்கைதீவுப் பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டமொன்றினை மேற்கொண்டு அதனை நவீன கிராமமாக மாற்றியமைக்க 'யு.என்.டி.பி.' நிறுவனம் முன்வந்துள்ளது.

நீண்ட காலமாக அடிப்படை வசதிகளின்றிப் பின்தங்கிய நிலையிலிருக்கும் இக்கிராமத்தில் சொந்தக் காணியுள்ளவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபா செலவில் 20 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அங்கு நூல் நிலையம், முன்பள்ளி மற்றும் கூட்டுறவுக்கிளை என்பனவும் நிறுவப்படும்.

காக்கைதீவுக் கிராமத்தின் வடிகாலமைப்பு, நீர் விநியோகம் என்பன சீர்செய்யப்படும். கடந்த கால வன்செயல்களின் போது சேதமடைந்த நிலையிலிருக்கும் காக்கைதீவு இறங்குதுறை திருத்தியமைக்கப்படுவதுடன் அப்பகுதியில் மீன் சந்தையொன்றும் அமைக்கப்படவுள்ளது.

மேலும் இங்கு உப தபாலகமொன்றையும் இப்பகுதிப் பிள்ளைகளின் வசதி கருதி 5 ஆம் ஆண்டு வரையான புதிய பாடசாலையொன்றினையும் நிறுவுவதற்குத் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (த-100)

### உதயவாக்கு

மனித வாழ்க்கை என்பது எண்ணுதற்கரிய பல திருப்பங்களைக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதி. – மு.வ.

### நாளை

சித்திரை 15
வியாழக்கிழமை
28.04.2005
திதி : சதுர்த்தி
முற்பகல் 10.00 வரை
நட்சத்திரம் : கேட்டை
காலை 6.25
மூலம்
பின்னிரவு 05.00 வரை
கரிநாள்
[illegible] : 07.28 - 08.58
[illegible] : 01.28 - 02.58
(யாவும் பழைய நேரப்படி)

# எழுதுமட்டுவாழில் படையினர் பௌத்த விகாரைகள் அமைப்பு!

## மக்கள் கொதிப்பு; தடுக்கக் கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.27

படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள எழுதுமட்டுவாழ் பகுதியில் இரு இடங்களில் படையினரால் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாழ் சிவன்கோயிலுக்கு அருகிலும், நாகர் கோயில் வீதியில் உள்ள வைரவர் கோயிலுக்குச் சமீபமாகவும் இந்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்றும் அங்கு அவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் அங்கு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதையிட்டு அப்பகுதி மக்கள் விசனமும் கொதிப்பும் அடைந்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு அவர்கள் கேட்டிருக்கின்றனர். (த-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

# "வெலா சலூன்"

WELLA

(குளிரூட்டப்பட்டது)

**இடம்: இல.8, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்.**

**நாள்: இன்று (27-04-2005) புதன்கிழமை**

**சுபநேரம்: காலை 8.00 மணி முதல்**

மேற்படி திறப்பு விழாவில் சுற்றத்தவர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: எம்மிடம் Hair Cuts, Facials, Strarghtining, Waxing, Head Massage, Bleaching என்பன செய்துகொள்ளலாம். சலூனுக்குத் தேவையான உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

T.P.No.: 0773144965.

உரிமையாளர்: சி.நித்தியராஜ்.

(44685)(26-14-34)


# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு வடமராட்சியில் மீட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட - இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள - மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடைபெறவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வடமராட்சிப் பகுதியில் நடைபெறவுள்ள இந்த வகுப்புகளில் ஏற்கனவே பதிவு செய்த மாணவர்களும் புதிதாக இணைய விரும்புபவர்களும் கலந்து கொள்ளலாம்.

இந்த வகுப்புகளுக்கான நேர அட்டவணைகளைப் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்திலோ அல்லது சிதம்பராக் கல்லூரியிலோ பெற்றுக்கொள்ளலாம்.

விஞ்ஞானம், வர்த்தகம், கலைப்பிரிவு ஆகியவற்றிற்கான வகுப்புகள் வட இந்து மகளிர் கல்லூரியிலும் சிதம்பராக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (த-203)

## வலுவிழந்தோருக்கு இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.27

வலுவிழந்தோருக்கான இலவச கணனிப் பயிற்சி நெறியினை வலுவிழந்தோர் சங்கம் வழங்கவுள்ளது.

'இலக்கம் 100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு' என்னும் முகவரியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் சங்கத்தின் அலுவலகத்தில் இந்தப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கணனிப் பயிற்சி நெறியில் பங்குபற்றிப் பயிற்சி பெறவிரும்பும் வலுவிழந்தவர்கள் தங்களுக்கான பதிவுகளை மேற்படி அலுவலகத்தில் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-203)


# "ஜெய் ஆகாஷ்" அவர்களுக்கு வீடியோ கலாமினியின் நல்வாழ்த்துக்கள்



கலைவளம் மிக்க யாழ்-தாவடியின்

**தவப்புதல்வன் ஜெய் ஆகாஷ்**

இன்று தமிழகத் திரையுலகில் தென்னக நடிகர்களுடன் போட்டி போட்டு தலை நிமிர்ந்து முன்னணியில் நிற்பது ஈழத் தமிழர்களைப் பெருமையுற வைத்துள்ளது. 'ஜெய்ஆகாஷ்' மேலும் புகழ்பெற்று சிறப்புடன் மிளிர மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

'இராம கிருஷ்ணா', 'குருதேவா' போன்ற வெற்றிப் படங்களின் வரிசையில் 'செவ்வேல்'படத்திலும் தனது முத்திரையைப் பதித்து சிறப்புடன் நடித்துள்ளார். அதேவேளையில், 'அமுதா', 'காற்றுள்ளவரை' படங்களும் வெற்றிப் படங்களாக மிளிர வேண்டும் என்ற நம்பிக்கையுடன் அவரது படைப்புக்களைப் பெரிய திரை அரங்குகளில் பார்த்து மகிழ்வோம்.

ஈழத்தமிழ் மகன் கலைச்சுடர் ஜெய் ஆகாஷ் பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்.

**வீடியோ கலாமினி, அச்சுவேலி**

(சி-42518)(42-14-34-26) **077 3053080.**


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-2002)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.மாவட்ட ஒளிக்கலை ஒன்றியத்தின் திறப்புவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இல.43, பிரப்பங்குளம் ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இத்துறை சார்ந்த அனைதது புகைப்பட, வீடியோப்படக் கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-202)

## கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயத்தில் 'பொப்லெப' திட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கான கருத்தரங்கு எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர்' திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (த-117)


# கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற ஆசிரியரும் எமது ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவரும் கட்டப்பிராயைச் சொந்த இடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய

**செல்லையா விஜயரட்ணம்**

அவர்கள் காலமானதை அறிந்து மிகவும் மனம் வருந்துகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவியாகிய ஸ்ரீ முத்துமாரி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

பரிபாலன சபை,
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கட்டப்பிராய்.

44679)(26-14-34)



# 6ஆம் மாத மாசியம்



அமரர் பிரம்மஸ்ரீ
**இராசையா ஐயர் நடனசபாபதி ஐயர் (சபாஜயர்)**

| பூவுலகில் | விண்ணுலகில் |
| --- | --- |
| 09-11-1948 | 01-11-2004 |

அன்னாரின் 6 ஆம் மாத மாசியம் இன்று (27-04-2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

நீலியம்பனை,
மல்லாகம்.

(சி-42517)(26-14-34) - குடும்பத்தினர்.



# தேவை

மில் வேலை தெரிந்த தொழிலாளர்களும் அத்தோடு சமையல் செய்யக்கூடிய ஒருவரும் தேவை.

தொடர்பு: **விஜித்தா அரிசிஆலை,**
தாவடி தெற்கு, கொக்குவில்.
T.P.: 021 222 6658.

(44638)



# மணமக்கள் தேவை

எம்மிடம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் மணமகன்கள், மணமகள்கள் ஜாதகங்கள் உண்டு. O/L, A/L, மேற்படிப்புப் படித்த அழகிய மணமக்கள் தேவை. நேரடியாக உடன்தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**சதுர்சிகா திருமணசேவை**
R.சாந்தகுமார், C/o N.கந்தையா
மூத்தநயினார் கோயிலடி சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை

Note: தபால் மூலம் தொடர்புகள் ஏற்றுக்கொளளப்படமாட்டா.

(44654) (26-14-34)



# விற்பனையாகின்றது!

தரம் 7 - புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான

☆ **புவியியல்**
செல்வி ராதா அம்பலவாணர் B.A.Dip.in Ed.

☆ **வரலாறு**
ம. சிவரூபன் B.A.(Hons)

☆ **குடியுரிமைக்கல்வி**
செல்வி மனோகரி முத்துலிங்கம் B.A.(Hons)

வெளியீடு: **ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,**
235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-42516)(26-14-34)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 23 - 02 - 1922 | 28 - 03 - 2005 |

**திருமதி சவுந்தரம் இராமலிங்கம்**

(உரும்பிராய் கிழக்கு)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் 28-03-2005 அன்று அமரத்துவம் அடைந்ததையொட்டி இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, கடிதம், தந்தி மூலமாக அனுதாபந்தெரிவித்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

10, Fairline Rd.,
Dehiwala. (44645)(26-14-34) - குடும்பத்தினர்.



# வடமராட்சி மாணவர்களுக்கு!

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
**07-05-2005 காலை10 மணிக்கு**

- Dip. in Ms Office
- Dip. in Computer Programming
- Dip. in Desktop Publishing
- Dip. in Autocad
- Dip. in Hardward Technoloy
- Dip. in Internet Technology

05-05-2005 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

விவரங்களுக்கு:
**Institute of Informatics Studies**
Nelliyady, Karaveddy.
021 226 3335.

(44652) (26-14-34)



# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
| --- | --- |
| 16 - 05 - 1950 | 21 - 04 - 2000 |

**திருமதி சண்முகமலர் தர்மராஜா**

(புனிதம், இணுவில் மேற்கு)

திதி: 27-04-2005

எங்களைப் பெற்று அன்பாய்
தரணியிலே பண்பாய் வளர்த்த அம்மாவே!
எங்களை எல்லாம் ஊர் போற்ற
எழுத்தறிவித்த அம்மாவே!
எங்களை எல்லாம் தவிக்க விட்டுவிட்டு
எம்மிடம் ஒன்றும் வாங்காமல்
ஏன் தெய்வம் ஆனாய் அம்மாவே?

வே.தர்மராஜா,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
(44678)(26-14-34)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**கணவர், பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையின்றிப் பேச்சுக்கு வருமாறு தலைவர் பிரபாவுக்கு ரட்ணசிறி அழைப்பு

**பதில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி இது. இந்தச் செவ்வியின் முதற் பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தது.**

❒ *கேள்வி:-* அதிகாரப் பரவலாக்கலை நீங்கள் தனித்துச் செய்யமுடியாதே! ஏனெனில், ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கிறதே?

☆ *ரட்ணசிறி:-* இல்லை இல்லை அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் ஜே.வி.பியினர் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

❒ *கேள்வி:-* ஜே.வி.பியினர் அதிகாரப் பகிர்வை (DEVOLUTION) ஆதரிக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கலை (DECENTRALIZATION) எதிர்க்கின்றனர். இதுதானே உண்மை?

☆ *ரட்ணசிறி:-* இதைத் தயவு பண்ணிக் கேளுங்கள். மக்கள் இந்தத் தீர்வை ஏற்றால் தாமும் ஏற்கத் தயாரென்று ஜே.வி.பியினர் கூறுகின்றனர். சிலசமயம் சர்வஜன வாக்கெடுப்பொன்றில் சமஷ்டி முறை சரியென்று தீர்ப்பளிக்கப்பட்டால் ஜே.வி.பியினர் அதற்கு இணங்குவர். அவர்களின் அபிப்பிராயம் வேறாக இருக்கலாம். ஆனால், மக்கள் அபிப்பிராயத்திற்கு அவர்கள் தலைவணங்க வேண்டிவரும். அது தான் யதார்த்தமும் கூட.

## பதில் பிரதமர் ரட்ணசிறி உதயனுக்குச் செவ்வி

❒ *கேள்வி:-* அப்படியாயின் சர்வஜன வாக்கெடுப்பொன்றிற்குச் செல்லும் எண்ணம் அரசுக்கு உண்டா?!

☆ *ரட்ணசிறி:-* இல்லை. புதிய அரசமைப்பு தேவையெனில் கட்டாயம் நாம் சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்லவேண்டாமா? அது அரசமைப்பில் குறிப்பிடப்படும் ஒரு விடயமல்லவா?

சமஷ்டி முறை தேவையென்றாலும் சர்வஜனவாக்கெடுப்பிற்குச் செல்லவேண்டும். நாடாளுமன்றமும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதனை அங்கீகரிக்கவும் வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் இதற்கு யாரும் எதிர்ப்பைத் தெரிவித்தாலும் மக்கள் தீர்ப்பின்படி இதற்குத் தலைவணங்கியாகவேண்டும். ஏற்கனவே, எமக்கிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதை ஜே.வி.பியினர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அரசமைப்பை மாற்றுவதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம் அல்லவா? எனவே, இது அரசமைப்புத் திருத்தம்தானே. எமது யோசனைகளுக்கு மக்கள் அங்கீகாரமளித்தால் ஜே.வி.பியினரும் உடன்படவேண்டிவரும். நிரந்தரத் தீவொன்றுக்கான யோசனையை ஜே.வி.பியினர் எதிர்க்கவில்லை. தற்காலிகக் கட்டமைப்பொன்றையே எதிர்க்கின்றனர். நிரந்தரத்தீர்வு என்ற விடயமே மக்கள் முன் செல்லும், தற்காலிகக் கட்டமைப்பு விடயம் மக்கள் முன்வைக்கப்படும் ஒன்றல்லவே?

நிரந்தரத் தீர்வானது அரசமைப்புத் திருத்தத்தினூடாகவே மேற்கொள்ளப்படும். தற்காலிகமாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்பானது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய கட்டமைப்பு ஒன்றை மக்கள் அனுமதியின்றி அவர்களுக்கு வழங்கி அதற்குப் பழக்கப்படுத்திவிட்டால் அவர்கள் அதனையே கோரி நிற்பார்கள். அப்படியாவதற் இதனைச் சற்றுத் தாமதப்படுத்துகின்றோம். அவ்வளவுதான். இதற்கு வேறு விசேட காரணங்களில்லை.

❒ *கேள்வி:-* பாதாள உலகக் கோஷ்டியை ஒழிக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இதனை முற்றாக ஒழித்துவிட முடியுமென நீங்கள் நம்புகின்றீர்களா?

☆ *ரட்ணசிறி:-* பாதாள உலகக் கோஷ்டியினரை முற்றாக ஒழிக்கமுடியாது. மனிதர்களின் சமூகத்துறையில் எப்போது மாற்றம் ஏற்படுகின்றதோ - நாகரிகம் ஏற்படுகின்றதோ - அப்போதே இவற்றைக் களையமுடியும். மனிதர்களின் கொள்கைகள் மாற்றப்படவேண்டும். அதுகாலவரையில் இன்று ஒருவனை ஒழித்தாலும் நாளை இன்னொருவன் அந்த இடத்திற்கு வருவான். சில பாதாள உலகத்தினர் எமது உத்தியோகத்தர்களையும் இணைத்துக்கொண்டல்லவா ஆற்றில் பாய்கின்றனர்?

எனவே, ஒழுக்க, தர்மக் கோட்பாடுகளுடைய சமூகமொன்று தேவை. இன்று எல்லோருடனும் அவரசரம் அவசரமாகப் பணம் சம்பாதிக்க வேண்டும். முன்னேறவேண்டும்மென்ற ரீதியில் அபத்தமான சிந்தனைகள் இருக்கின்றன. இவை மாற்றப்படவேண்டும். மக்களிடையே மனமாற்றமே தேவை.

❒ *கேள்வி:-* மதமாற்றத் தடைச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதில் தாமதம் ஏற்படுவது ஏன்?

☆ *ரட்ணசிறி:-* தாமதம் இல்லை. நேரம் வரும்போது இதனை நாம் சமர்ப்பிப்போம்.ஏற்கனவே ஒரு சட்டமூலத்தைக் கொண்டுவந்து கையைச் சுட்டுக்கொண்டதால் இதனை நன்கு ஆராய்ந்தே சமர்ப்பிப்போம். இவ்வாறான சட்டமூலங்கள் சட்டவிரோதமானவை என்று கூறி உயர்நீதிமன்றம் திருப்பி அனுப்புவதை நாம் விரும்பவில்லை என்பதால் அதனை நன்கு

கும் இடமுள்ளது. இதனால்தான் நிரந்தரத் தீர்வு குறித்து முதலில் பேசுமாறு வற்புறுத்தப்படுகின்றது. அதில் ஆராயப்படும் விடயங்களை இதில் உள்ளடக்கிக் கொள்ளலாம்.

❒ *கேள்வி:-* அப்படியானால் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை அரசு நடத்தலாமே?

☆ *ரட்ணசிறி:-* ஆமாம். அமைதி முயற்சிகளின் தாமதத்திற்கு நாம் காரணமல்லர். இதை முன் நகர்த்த வருமாறுகோரினாலும் எங்கோ அவர்கள் (புலிகள்) வரப்பின்னடிக்கின்றனரே? வாருங்கள் திருமண விருந்து உண்ணலாமெனக் கூறினாலும் எங்கோ அவர்கள் திருமணத் தரகர் பின்னால் அல்லவா செல்கின்றனர்? இது ஏனென்று எனக்குத் தெரியவில்லை. இதற்கான காரணங்களை அவர்கள் கொண்டிருக்கலாம். ஆனால், இது நீதியா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். இது எனக்குப் புரியாத புதிராக இருக்கின்றது. அரசு இவ்வளவு தூரம் வளைந்து கொடுத்தும் ஏன் அவர்கள் இதனைப் பயன்படுத்தாமல் இருக்கின்றார்களெனத் தெரியவில்லை.

❒ *கேள்வி:-* இந்தியாவுடன் பாதுகாப்பு ஒபபந்தமொன்றைச் செய்யப்போவதாக அரசு முனனர் கூறினாலும் இப்போது அது குறித்து மௌனம் சாதிப்பது ஏன்? இப்போதைக்கு எதுவும் நடைபெறமாட்டாதா?

☆ *ரட்ணசிறி:-* நாங்கள் இரு தரப்பினருமே ஆராய்ந்து வருகின்றோம். சட்டத்தரணிகள், முன்னாள் நீதியரசர்கள் இதனை ஆராய்ந்து வருகின்றனர்.

❒ *கேள்வி:-* நோர்வே சமாதானத்தூதுவர் எத்தனையோ தடவைகள் வந்து சென்றாலும் உரியபயன் ஏற்படவில்லையெனக் கூறினீர்கள். அப்படியானால் நோர்வே அனுசரணையாளர்களை மாற்றும் எண்ணம் உண்டா?

☆ *ரட்ணசிறி:-* நாம் நினைத்தால் எதுவும் செய்யலாம். அவர்களை வீட்டுக்கும் அனுப்பலாம். ஆனால், சமாதானத்திற்கான கதவுகள் திறக்கப்படப்போகின்ற ஒரு சூழ்நிலையில் அவர்களை வெறுக்கக்கூடாது. நோர்வே அனுசரணை தொடர்பில் பல நாடுகள் திருப்தி வெளியிட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தை விடுத்துத் தனித்து இருக்க முடியாது. உலகத்தோடு ஒன்றி வாழ்வதால் உலக அபிப்பிராயம் தொடர்பிலும் நாம் கவனமாக இருக்கவேண்டும்.

### இந்தியாவுக்கு ஆதரவு; பாக்.எதிர்க்கவில்லை

❒ *கேள்வி:-* ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவத்தைப் பெற முயலும் இந்தியாவிற்கு இது விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை இலங்கை வழங்குகிறது. இது தெற்காசியாவில் போட்டி நிலைமையொன்றை உருவாக்குமென்று பாகிஸ்தான் கூறுகின்றதே?

☆ *ரட்ணசிறி:-* நாம் முழுமையான ஆதரவை இந்தியாவிற்கு வழங்குகின்றோம். பாகிஸ்தான் இதனை எதிர்க்கவில்லை. இந்தியாவிற்கு முழுமையான ஆதரவை பாகிஸ்தான் வழங்கும். முன்னர் நிலைமை எப்படி இருந்ததோ தெரியவில்லை. அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் பின்னர் இந்த நிலைமை மாறிவிட்டது. இது தான் உண்மை.

❒ *கேள்வி:-* முன்னாள் பாதுகாப்பமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவின் தூதுவர் நியமனத்தை கனேடிய அரசு நிராகரிப்பது ஏன்? இதற்குப் பதில் நடவடிக்கை எதுவும் அரசினால் எடுக்கப்படுமா?

☆ *ரட்ணசிறி:-* நிராகரிக்கப்பட்டால்தானே பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும்? நிராகரிக்கப்படவில்லையே! ஒருவரின் பெயரை சிபாரிசு செய்ய முன்னர் அங்கு நாம் இது பற்றிக் கேட்போம். இதில் மட்டுமல்ல. எந்தவொரு நியமனத்தைச் செய்ய முன்வரும் வெளிநாட்டமைச்சு சம்பந்தப்பட்ட நாட்டிடம் இது குறித்து முதலில் வினவும். அந்த நாட்டிலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்படாவிட்டால்தான் இந்தச் சிபாரிசை மேற்கொள்வோம்.


சாதாரண ஒருவர் சொல்லும்போது என்ன நடக்குமோ அதைத்தான் இந்த விடயத்தில் ஊடகங்கள் கூறியிருக்கின்றன. எமது நாட்டுத் தூதுவர் ஒருவர் செல்லும்போது அவர்களின் குடிவரவு, குடியகல்வு சட்டங்கள் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டா. அவ்வாறான தூதுவர் பதவிக்கு இராஜதந்திர அனுமதியுண்டு. அவர் தொடர்பில் குற்றச் சாட்டுக்கள் இருக்குமாயின் உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்திருக்க வேண்டுமே? நாம் பகிரங்கமாகவே கோரினோம். ஆனால் சந்திரானந்த டி சில்வா தொடர்பாக எந்த முறைப்பாடுகளும் இல்லையே?

### பிரபாவுக்குச் செய்தி

❒ *கேள்வி:-* இறுதியாக உங்களிடம் ஒரு கேள்வி. சிரேஷ்ட அரசியல்வாதி என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் நீங்கள் விடுக்கும் கோரிக்கை என்ன?

☆ *ரட்ணசிறி:-* எம்முடன் பேச்சு நடத்துவதற்காக பேச்சு மேசைக்குத் தயவுசெய்து வாருங்கள். நிபந்தனைகளை விதிக்காமல் வாருங்கள். நிபந்தனைகள் பற்றி இங்கு பேசலாம். முன் நிபந்தனையின்றி வாருங்கள்.





அப்படி வந்தால் நாளைக்கே பேச்சுக்களை நடத்த அரசு தயார். சமாதான முயற்சி தாமதித்தால் சிரமப்படுவது யார்? பிரபாகரனா? அல்லது நாமா? அங்கும் இங்குமுள்ள அப்பாவி மக்களே துன்பப்படுகின்றனர். ஏன் அப்பாவி மக்களுக்குத் துன்பத்தை வழங்கவேண்டும். நாம் எங்கிருந்தாலும் பாதுகாப்புடன் இருப்போம். விக்கிரமநாயக்கா ஐயாவும் பாதுகாப்பாக இருப்பார். பியதாஸவும், ஜோன் நோனாவும், வேலுவுமே பலியாகவேண்டியுள்ளது. எனவே, தயவுசெய்து பிரபாகரன் ஐயா அவர்களே, நாட்டைப் பற்றிச் சிந்தியுங்கள். எமக்கிடையே பிரச்சினைகள் இருந்தால் வாருங்கள். நாம் பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வோம். அதுதான் எனது கோரிக்கை.

அன்று இருந்ததுபோல் நாம் சகோதரத்துவத்துடன் இருக்கவேண்டும். மனித நாமத்தின் பெயரால் பேச்சுக்கு வருமாறு நான் பிரபாகரனிடம் கேட்கிறேன். நாம் நேர்மையாகப் பேச முற்பட்டால் இதில் வேறு யாரும் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

நாம் இலங்கையர்கள். அன்று நாம் எல்லைகளைப் பற்றி பேசவில்லையாயின் இன்று ஏன் பேச வேண்டும்? அன்று ஆயுதங்களைத் தூக்கவில்லையாயின் - அன்று எமது பொருள்களை அந்தப் பகுதிக்கு விற்று அந்தப் பகுதிப் பொருள்களை இங்கு விற்கமுடியுமாயின், அன்று எமது ஆள்கள் அங்கும், அங்குள்ளவர்கள் இங்கும் திருமணம் செய்யமுடியுமாயின் - இன்று ஏன் இந்தப் பிரிவினை? நாம் யதார்த்தத்தைப் பேசியாகவேண்டும். முன்னர் இருந்த நிலைமைக்கு நாம் செல்லவேண்டும். நல்லுறவைக் கட்டியெழுப்புவோம். ✳



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் 26 வருடங்கள் கடமையாற்றி இளைப்பாறிச்சென்ற ஆர்.நவராஜாவின் சேவை நலன் விழா அண்மையில் கூட்டுத்தாபன அலுவலகத்தில் இடம்பெற்ற சமயம் பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் அவருக்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டுவதைப் படத்தில் காணலாம். (படம்: அரியாலைச் செய்தியாளர்)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய சுவாமி விவேகானந்தர் புகைப்படக் கண்காட்சியை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் சுவாமி சித்ருபானந்தாவும் ஆசிரியைகள், மாணவிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் - கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீ கந்
# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

## அடியவர் குறைதீர்க்கும் குமரன்



தமிழ் மக்களின் தனித்துவமான தமிழ்க்கடவுள் முருகன். காரைநகர் கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் இன்று மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகப்பெருமான். அவன் கலியுகவரதன் எனப்போற்றப்படுகின்றான். தம்மை வழிபடும் அடியார்களின் குறை தீர்க்கும் குமரனாக முருகப்பெருமான் இந்த அருள்மிகு ஆலயத்தில் கோயில் கொண் டெழுந்தருளி வீற்றிருந்து அருள்மழை பொழிகின்றான்.

இந்த ஆலயமானது வெகுவிரைவில் திருப்பணிகள் முடிவுற்று இப்போது அருள் கொழிக்கும் ஆலயமாக அழகுடன் பொலிவுற்றுத்திகழ்கின்றது. இங்கு வாழும் மக்கள் உண்மையில் புண்ணியஞ்செய்தவர்களாவர். அவர்களது பூர்வ ஜென்ம புண்ணியந்தான் இன்று குடமுழுக்குப்பெருஞ்சாந்தி விழாக்காணும் பெரும் அரிய பேற்றினைப் பெற்றுள்ளார் கள்.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற குமரன் இங்கே ஸ்ரீ வள்ளி தேவ சேனாதியாகக் காட்சியளிப்பது கண்கொள்ளாக்காட்சியாகும்.

அவருடைய திருவருட் பார்வை தமக்குக் கிடைக்கமாட்டாதா என்று ஏங்கும் பக்தர்கள் கூட்டங்கூட்டமாக வந்து எம்பெருமானைத் தரிசித்து தம் குறைகளைச் சொல்லி அவற்றைத் தீர்த்து வைக்குமாறு நேர்த்தியுடன் மன்றாடுகின்றார்கள்.

வேண்டுவார் வேண்டுவதை ஈபவனாகிய தமிழ்க்கடவுள் முருகன். ஆகவே இன்று முதல் நாட்டில் அமைதியும் சுபிட்சமும் சமாதானமும் நிலவி மக்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு இன் புற்றிருக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியை வணங்கி எல்லாம்வல்ல நல்லைக்கந்தனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து உளமாரப்பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்*
*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

## முருகன் அருள் கிடைக்கட்டும்!

காரைநகர் சிவ புண்ணிய ஷேத்திரத்தின் கண்ணே கிழவன் காடுப்பதியில் எழுந்தருளி அரசுபுரியும் முருகப்பெருமானின் ஆலயமானது அடியார்களின் அரும்பெரும் முயற்சியால் புனருத்தாரணம் செய்யப்பெற்று சித்திரைத்திங்கள் 14 ஆம் நாள் இன்று புதன்கிழமை கும்பாபிஷேகம் நிறைவு பெறுகின்றது. எம்பெருமான் வள்ளி, தெய்வானையாகிய இச்சாசக்தி, கிரியாசக்திகளின் துணையோடு சைவப்பெருமக்கள் எதிர் நோக்கும் அனைத்து இடர்களையும் சூரபத்மனைக்களைந்தது போல் களைந்து அருளாட்சி புரிந்து அருள்புரிவானாக. ஆகமமுறைப்படி கிரியைசெய்யும் குருமார் மேலும் குருவருள் பெறுவார்களாக. இக் கிரியைகளை முன்னின்று செய்விக்கின்ற ஆலய குருக்களுக்கும் அவரோடிணைந்து இக்கர்மத்தை நிறைவேற்றுகின்ற நலன்புரிவோர்களின் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகுவதாக. அன்பர்கள் அனைவர்களின் அனைத்து தொழில்களும் வெற்றி பெற்று சகல சௌபாக்கியங்களும் நிறைவதாகுக. மாணவர்கள் சிறந்த கல்விமான்களாக எதிர்காலத் தலைவர்களாக மலர்வதாக அனைத்துக்கும் எம்பெருமான் அருள்புரிவானாகுக.

**சிவபூதி பால பத்மநாதக் குருக்கள்**
*கிரியாரத்தினம், சோதிட பூசணம்*
*அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர்பேரவை*
*தலைவர். பிரதமகுருகலட்டி முத்துமாரி அம்மன்.*



## சமாதானமும் அமைதியும் கிடைக்க வேண்டும்

காரைநகர் கிழவன்காடு என்னும் பதியில் இற்றைக்கு பல்லாண்டுகாலமாக கோயில்கொண்டு அருளாட்சிசெய்கின்ற வள்ளி தெய்வானை சமேதராக முருகப்பெருமானது புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்திப் பெருவிழா பார்த்திப வருட சித்திரைமாத 14ஆம் நாள் புதன்கிழமை அனுசநட்சத்திரமும் கூடிய புண்ணிய சுபவேளையில்(இன்று) நடைபெறுகின்றது. இப்பெருஞ் சாந்திப் பெருவிழா சிறப்புற நடைபெற்று நாட்டில் சாந்தி, சமாதா னம், அமைதியும் நிலைபெற எல்லாம்வல்ல கலியுகவரதனாம் அந்த வேலவனின் பாதாரவிந்தங்களை சிரம்தாள்த்திப் பிரார்த்திக்கிறோம்.

*சுபம்*

*சர்வசாதகாசிரியர்*
*அருள்ஞானக்கிரியாமணி*
**சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக்குருக்கள்**
*பிரதமகுரு.*
*ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில் உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை.*

## கிழவன் காடு புண்ணிய ஷேத்திரம்

காரைநகரில் கிழவன்காடு எனும் புண்ணிய ஷேத்திரத்தில் கலியுகவரதன் என போற்றப்படும் ஞானசத்தியாய் எழுந்தருளி அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பார்த்திப வருஷ சித்திரை மாதம் 27 ஆம் திகதி அனுச நட்சத்திரத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" எம்பெருமானின் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற மஹாமாரி தாள் பணிந்து பிராத்திக்கின் றோம்.

*சுபமஸ்து*
*இன்பமே சூழ்க*

*வழக்கம்பரை மஹாமாரி,*
*அம்பாள் தேவஸ்தான (பிரதமகுரு) சாதக இளவரசு*
**சு. சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள்**

## எந்தனை இரட்சிக்க ஏன் இன்னுந் தாமதமோ?

*ஆரைத் தடுத்த வேலான் சுப்ரமணியன் குமரன்*
*சுகமான வாழ்வு தரும் தெய்வயானை லோலன்*
*சீரைத் தேடும் அடியார் சிந்தையிலுறையும் குகன்*
*சிவபெருமானின் மைந்தன் முருகன் சிங்கார வேலனவன்*
*ஊரைப் புகழ்ந்தேத்தும் உத்தமர் உள்ளத்திலமர்ந்த*
*உமையாள் மைந்தனே உன்னத வாழ்வு தரும்*
*காரைநகர்க் கிழவன் காட்டிலுறை கந்த சுவாமியே சரணம்*
*கைதொழுது வணங்கினோம் கார்த்திகேயனே வா வா!*

*சிந்தனையிலென்றும் நல்ல சிறப்பான எண்ணங்களோடு*
*சீரான வாழ்வு தரும் சிங்கார வேலவனே முருகா!*
*உந்தனைப் பணிந்தேத்தி உள்ளத்தில் உனை இருத்தி*
*உத்தம வாழ்வு வேண்டி நாம் உளமாரப் பணிந்தோமே*
*வந்தனை செய்தோம் ஐயா! வண்ணமயில் வாகனனே*
*எந்தனை ரட்சிக்க ஏன் இன்னும் தாமதமோ?*
*கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் காப்புடனே*
*கண்ணியமாய் நாம் வாழ கந்தனே நீ அருள் தாராய்!.*

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

### கிரியாகால

சித்திரை 14 ஆம் நாள் புதன்கிழமை 27.04.2005 அதிகாலை 4 மணி முதல் ... சர்வாஞ்சலி சமர்ப்பணம், வேத, ஸ்தோத்திர, திருமுறை பாராயணம், ஆசீ... அபிஷேகம், யாத்திரதானம், பிரானகும்ப உத்தாபனம், சர்வமங்களவாத்தியச... கும்பாபிஷேகம், பரிவாரமூர்த்திகள் கும்பாபிஷேகம், மஹா கவிர்நிவேதனம், தே... அபிஷேகம், கர்பாவரண அபிஷேகம், தசமங்களதரிசனம், திருமுறை ஓதி திருக்... ஆசியுரைகள் விபூதி பிரசாதம் வழங்கல். மாலை 3 மணிக்கு சாயரட்சை பூஜை ... வருவார். தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## அனைவரும் நன்றிக்கு

காரைநகர் மக்கள் கந்தபுராண கலாசாரத்துடன் வாழ்க்கை நடத்துபவர்கள் என அறிஞர்கள் கூறுவர். இக்கலாசாரத்தை ஏற்படுத்துவதில் முருகன் ஆலயங்களிற்கு பெரும் பங்கு உண்டு. அந்த வகையில், 1840 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு வாழ்ந்த ராமு பரமு அவர்கள் வருடாந்த மஹோற்சவங்களுக்கு தவறாது பால் காவடி எடுத்துக் கதிர்காமம் நடந்து சென்று வருவது வழக்கம். அவ்வாறு சென்று வரும் நாளில் ஒரு நாள் அவருக்கு கிடைத்த அசரீரி வாக்கின்படி கிழவன் காடு என்னும் பதியில் கீற்றுக் கொட்டகை அமைத்து வேல் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். அவரின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து இன்றுவரையும் வேல் பிரதிஷ்டையை வழிபட்டு வருகின்றார்கள் .

தொடர்ந்து இவ்வாலயம் ஆகம விதிமுறைகளுக்கமைய அமைக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1959 ஆம் ஆண்டு இங்கு உற்சவ மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இறுதியாக 1981 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயத்தில் மாதப்பிறப்பு, தைப்பூசம், கார்த்திகை உற்சவம், மணவாளக் கோலம், கந்தசஷ்டி, சூரன்போர், திருக்கார்த்திகை, திருவெம்பாவை, ஐப்பசி

மலரமைப்பு:
காரைநகர்ச் செய்தியாளர்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:


ஐடியல் அக்கடமி
தலைமை நிறுவனம்: சண்டிலிப்பாய்.
கிளைநிறுவனம்: இடைப்பிட்டி, காரைநகர்.

அம்பாள் மில்
மில் வீதி, இடைப்பிட்டி,
காரைநகர்.

பிள்ளையார் ஸ்ரோஸ்
யோகபுரம்,
மல்லாவி.

குமரன் ரெக்
யாழ். சா
கிளிநொ

கணேசன் ஸ்ரோஸ்
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.





சிவகணேசன்
ஸ்ரோஸ்
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.





SRI MURUGAN
Communication & Computer Systems.
303, K.K.S. Road, Jaffna. T.P. No. 021 222 2670, 3588, Fax 021 222 3214


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்தசுவாமி கோயில் புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ
# ...ாச் சிறப்பு மலர் - 27-04-2005





## காரைநகர்தெய்வீகம் பொருந்திய பதி



"மேன்மை கொள்சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்"

**கோ**யில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது சைவத்தமிழ் மக்களின் அமிர்த வாக்காகும். இற்கு அமைவாக சைவமக்கள் தாம் வாழ்கின்ற இடங்கள் தோறும் கோயில் அமைத்து வழிபாடு இயற்றி வருகின்றனர். இவ்வாறே காரைநகர் கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் 27.04.2005 இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெறு கின்றதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். காரை நகர் பிரதேசம் பல ஆலயங்களை தன்னகத்தே கொண்டுவிளங்கும் இடமாகும். சைவவளமும் பண்பும் பொலிந்து விளங்கும் இப்பிரதேசத்தில் சைவசமயத்தின் வளர்ச்சி உயர்வடைவது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆலயத்தைப் புனரமைப்புச்செய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறு வதற்கு உதவிகள் புரிந்த சைவமக்கள் அனைவரும் சிவபுண்ணிய சீலரே ஆவர். ஆலயங்கள் அருள்பொலிந்து விளங்குவதற்கு மஹா கும்பாபி ஷேகம் நித்தியபூஜை, நைமித்திய பூஜை என்பன சிறப்பாகவும் பக்திபூர்வ மாகவும் நடைபெறவேண்டும் என்பது அறிவுடைப்பெரியோர்களின் கருத்தாகும். இவ்வாறே காரைநகர் கிழவன்காடு திருவருள்மிகு ஸ்ரீ கந்த சுவாமி கோயிலும் அருள் பொலிந்து விளங்க வேண்டும் என்று எல்லாம்வல்ல காரைநகர் கிழவன்காடு முருகப்பெருமானை பிரார்த்தனை செய்து எனது உரையினை நிறைவுசெய்கின்றேன்.

சைவப்புலவர்
**வ.கந்தசாமி**
*தலைவர், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்..*

## குமரனுக்கு இன்று குடமுழுக்கு



**ஈழ**மணித் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்த சப்த தீவுகளில் காரைநகர் பல்வேறு வழிகளில் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. சைவமும் தமிழும் ஒருங்குசேர வளர்ந்து சிறப்புற்று விளங்கும் காரைநகர் புதுவீதி கிழவன்காடுப் பதியில் கோயில்கொண்டு எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கி அருளாட்சிபுரிந்து வருகின்றார் முருகப்பெருமான். புராதன சிறப்புக்களை கொண்ட இந்த ஆலயத்தில் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அடியேன் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

குன்றுதோறும் ஆடல்புரிந்து அழகிற்கும் அறிவிற்கும் தலைமையாகி உலக சம்ரஷனைக்காக உதித்த முருகப்பெருமான் இன்றும் பல்கோடி மக்களது இதயங்கவர்ந்த முழுமுதற்கடவுளாகவே வணங்கப்படுகின்றார். முருகவேளின் திருக்கரங்களில் உள்ள ஆயுதங்கள் அத்தனையும் ஏதோ ஒருவகையில் உலகை வழிநடத்திவருவதால் எங்கெல்லாம் சிவத்தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இந்த ஆயுதங்களையும் முருகனாகவே கணித்து வழிபட்டு உய்வடைகிறார்கள்.

தேவ ரிஷிகளாலும், சங்கப்புலவர்களாலும் தேவர்களாலும் ஆராதிக்கப்பட்டு எமது அறிவுக்கு எட்டாத அரும்பெரும் சக்தி தத்துவங்களைப் பெற்ற முருகப்பெருமான் ஈழமண்டலத்திலும் அவர் தம் திருவிளையாடல் பெருமையினால் பற்பல நாமங்களோடு அருளாட்சி செய்துவருவது கண்கூடு இதனுள் காரைநகர் கிழவன்காடு முருகன் ஆலயமும் சிறப்புமிக்கதாகும். அருமையான சூழலுள் அறிவுநிறைந்த முருகபக்தர்கள் குழாம் அருகே வாழ அருட்பெரும் சோதி போன்று அடியவர்களுக்கெல்லாம் அருள்சுரந்து நித்திய நைமித்தியங்களை ஏற்று அரசகளையோடு அவர் அங்கு வீற்றிருக்கின்றார். இத்தகைய பெருமைவாய்ந்த முருகப்பெருமானுக்கு இன்று நடைபெறுகின்ற மஹா கும்பாபிஷேக நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறுகின்ற உற்சவங்களிலும் கலந்துகொள்ளும் அடியவர்கள் அனைவருக்கும் முருகப்பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**தி.மகேஸ்வரன்**
*இந்துகலாசார முன்னாள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்.*

### ...கால விவரம்

...ி முதல் விநாயக வழிபாடு, யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, விஷேட தீபாராதனை, ...ாம், ஆசீர்வாதம் அனந்தகோடி நமஸ்காரம். காலை 8.10 மணிக்கு ஸ்தூபி ...ாத்தியசகித, திருவீதிப்பிரதக்ஷணம், பிரதான கும்பமூலாலயப்பிரவேஷம், மஹா ...தனம், தேவர்கள் வழிபாட்டிற்காக திருக்கதவம், காப்பிடுதல், ஸ்திராகுதி, எஜமான் ...ஒதி திருக்கதவம் திறத்தல், மஹா அபிஷேகம், விஷேட பூஜை, மஹாஆசீர்வாதம், ...ைச பூஜை தொடர்ந்து திருக்கல்யாணம் நடைபெற்று எம்பெருமான் திருவீதியுலா

## ...றிக்கு உரித்தானவர்கள்

வெள்ளி போன்ற தினங்களில் விஷேட அபிஷேக பூஜை வழிபாடுகள் மற்றும் சுவாமி வீதி உலா வருதல் என்பன சிறப்பாக நடைபெறும். ஆனி மாத அனுஷ நட்சத்தி ரத்தைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்து நாள்கள் சிறப்பாக அலங்கார உற்சவம் இடம் பெறும். இரண்டுகாலப் பூஜை கிரமமாக நடைபெற்று வருகின்றது.

பிள்ளையார் ஆலயம், வசந்த மண்டபம், மகா மண்டபம், வைரவர் ஆலயம், சுற்றுப்பிரகாரம், சுற்று மதில்கள் என்பன புதிதாக அழகுற அமைக்கப்பட்டு இன்று புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் 7.29 மணிவரை உள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

தற்போது ஆறாவது தலை முறையில் பொது மக்களின் பண உதவி, பொருள் உதவி பெற்று நான் இன்று வரை இவ்வாலயத்தை சிறப்பாக நடத்தி வருகின்றேன். இத் திருப்பணி வேலைகள் நிறைவுபெற பொருள் உதவி, சரீர உதவி, பண உதவி, புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்றைய மஹா கும்பாபிஷேக நன்நாளில் அடியார்கள் அனைவரும் முருகப் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வுகளைக் கண்டுகளித்து அனைத்து செல்வங்களையும் பெற்றுய்ய வேண்டிப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ ச.ப. ஆறுமுகக்குருக்கள்**
*(பரம்பரை ஆதீனம்)*

## புண்ணியம் தரும் பெருஞ்சாந்தி விழா



**கா**ரைநகர் புதுறோட் கிழவன் காடுப்பதியிலே எழுந்தருளியிருந்து நல்லாட்சிபுரியும் முருகப்பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கலியுகத்து தெய்மாக இருக்கும் முருகப்பெருமானுக்கு நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியப் பேற்றைத் தருவதாகும்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான் இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளியிருந்து அருள்வழங்குகின்றார். சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் இருகண்கள் எனப்போற்றி வாழும் மக்கள் நிறைந்த காரைநகரில் நிறைந்த ஆலயங்களைக்கொண்ட இப்பிரதேசத்தில் வாழும் மக்களுடைய ஆன்மீகச்சிந்தனையை மேலெடுத்துச்செல்வதாக கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைத்து சைவமக்களுக்கும் இறையருள் பெற்றுத்தருவதாகும். ஓர் ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை செய்யும் அபிஷேகம் இதுவாகும். இதனைச் செய்வதும், பார்ப்பதும், ரசிப்பதும், புண்ணியப்பேற்றைத் தருவதாகும். கும்பாபிஷேகத்தை செய்கின்ற ஆலய குருமார்களும் காரைநகர் வாழ் மக்களுக்கும் இறையாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**க.ஸ்ரீமோகனன்**
உதவி அரச அதிபர். காரைநகர்/ ஊர்காவற்றுறை.

## திருக் குடமுழுக்கு காண வாரீர்!

நாற்திசையும் சமுத்திரத்தின் கண்ணேமேவும்
காரைநகர் கலியுக வரதனாய் காட்சிதரும்
ஈழத்துச் சிதம்பரத்தின் அம்மை அப்பன் மைந்தனாய்
காரைநகர் கிழவன் காட்டுத் திருப்பதியில்
திருக்காட்சி தரும்
பார்த்திப சித்திரை அனுச நட்சத்திர நன்நாளில்
திருக்குடமுழுக் காட்டிடுவீர் நாம் பார்க்க
திருக் கோலக்காட்சியை முப்பத்து முக்கோடி
தேவர்களும் சப்த ரிஷிகளும் பரவசம் அடைவார்கள்
கண்கொள்ளாக் காட்சியை நாம் பார்க்க
ஆயிரம் கண்கள் போதாது போதாது.

சுபம்

*கவிமாமணி*
**சிவ. சிவானந்தராசா ஐயா**
*தேசிய கல்வியியற் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

(C-42502) (53-12-16)


...ரெக்ஸ்ரைல்
...சாலை,
...நொச்சி.


பிள்ளையார் அருள்
யாழ்.சாலை,
கிளிநொச்சி.

யாழ். –கொழும்பு
போக்குவரத்துச் சேவை
பரமசாமி அமிர்தலிங்கம்
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

ஏகாம்பரம் புடைவை மாளிகை
72(9). பெரிய கடை.
யாழ்ப்பாணம்.

கலைமகள் வர்த்தக நிலையம்
286, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.S.ENTER PRISES
Transporters & General Merchants
எஸ்.எஸ்.என்டபிரைஸ்
220, Keyzer Street, Colombo - 11
T.P. 433679, 336186
Fax : 336186
321, Navalar Road, Jaffna.
T.P. 021 222 3509
021 222 7904




குமரன் சில்க்ஸ்
91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P 021 - 222 6244


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10
11
1971



மறைவு
28
03
2005

அமரர்
## விக்கினேஸ்வரன் சிறிகுமார்
(உரிமையாளர், கல்லுடைக்கும் ஆலை)

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து
எமது இல்லத்தின் பொறுப்பாய் இருந்தீரே!
இன்முகங் காட்டி எல்லோருடனும் நேசமாய்ப் பழகி
உற்ற நேரத்தில் உதவிகள் பலசெய்து
என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே!
எம்மை விட்டு ஏன் தான் பிரிந்தீரோ?
ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனின்
திருப்பாதங்களைப் பணிகின்றோம்.

இன்று (27.04.2005) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொட்டைக்காட்டு லேன்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தாய், மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

(44512) (54-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி கழகங்களிடையே அடுத்த மாதம் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி விளையாட்டுத்துறையினர் தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றினை எதிர்வரும் மே மாதமளவில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றனர்.

கரபந்தாட்டம், தாச்சி, உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட இருக்கின்றன. மேற்படி போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் தென்மராட்சியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை உடனடியாகத் தென்மராட்சி விளையாட்டுத்துறைப் பேரவைக்கு அனுப்பிவைக்குமாறு பேரவை இணைப்பாளர் வை.இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (த-75)

## மேசைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.கல்வி வலயம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்டத் திடலில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(த-190)

# மாவட்ட மட்ட உதைபந்தாட்டத்தில் புங்குடுதீவு ம.வி.மாணவன் திறமை

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் திறமையாக விளையாடி 7 கோல்களை அடித்துள்ளார்.

புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆண்டு 11 இல் கல்வி கற்கும் தேவதாஸ் கிறேசன் என்பவரே தான் விளையாடிய இறுதிப் போட்டி உட்பட நான்கு போட்டிகளில் இக்கோல்களை அடித்துள்ளார்.

இவர் முதல் சுற்றில் இரண்டு ஆட்டங்களில 2 கோல்களையும் கால் இறுதி ஆட்டத்தில் 3 கோல்களையும் அரையிறுதி ஆட்டத்தில் 2 கோல்களையும் அடித்துள்ளார்.

கால்இறுதி ஆட்டம் அரையிறுதி ஆட்டங்களில் தனது அணி சார்பில் இவர் மட்டுமே கோல்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 2002 ஆம் ஆண்டில் 15 வயதுப் பிரிவில் பாடசாலை அணியின் சார்பில் விளையாடத் தொடங்கிய இவர் தொடர்ந்து விளையாடி வருகின்றார்.

(த-86)

## விளையாட்டு விழா ஒத்திவைப்பு

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் இயங்கிவரும் வட்டக்கச்சி பிரபா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா கடந்த 15 ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியிருந்தது. தற்போது தொடர்ந்துபெய்து வரும் மழை காரணமாக இவ்விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-405)

# பிரதேச விளையாட்டுப் போட்டியில் காரைநகர் அம்பாள் வி.க. சம்பியன்

காரைநகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற தடகளப் போட்டியில் அம்பாள் விளையாட்டுக் கழகம் 116 புள்ளிகளைப் பெற்றுப் பிரதேச சம்பியனானது.

கோவளம் விளையாட்டுக் கழகம் 79 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகம் 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இந்தத் தடகளப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெற்றது.

போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனாக சோலையான் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சொ.புஸ்பலிங்கமும் சிறந்த வீராங்கனையாக அம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நா.சசிகலாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக யாழ் செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரகத்திப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம், காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. அதிபர் பண்டிதா மு.சு.வேலாயுதபிள்ளை, காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.கானகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-173)

## விளையாட்டு

## முன்பள்ளி விளையாட்டு விழா

கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் நடைபெற்றுவரும் இராமநாதபுரம் மனோகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை முன்பள்ளி நிர்வாகத்தினரும் பெற்றோரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (த-405)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஏப்.27

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று மாலை 5 மணிக்கு பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் கோப்பாய் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

(3-86)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.வை.எம்.சி.ஏ.வருடாவருடம் ... கத்தவர்களுக்கு இடையில் நடத்திவரும் ... விளையாட்டுப் போட்டியில் மேசைப்பந்த... இன்று புதன்கிழமை காலை 9 மணியள... வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(3-190)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறவுள்ள மெய்வன்மைப் போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரெத்தினம் கேட்டுள்ளார். (3-190)

## யாழ்.கல்வி வலய மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.

யாழ்.கல்வி வலய மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் மே மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளின் முதலாம், 2ஆம், 3ஆம் இடங்களினைப் பெற்றவர்கள் வலய மட்டப் போட்டியில் பங்குகொள்ளவுள்ளனர்.

(த-190)

# நல்லூர் கோட்ட பாடசாலைகளின் மெய்வன்மை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் 11 வயது, 13 வயது, 15 வயதுப் பிரிவுகளின் முடிவுகள் வருமாறு-

### 11 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**75 மீற்றர்-** எஸ்.சினகாந்தா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), என்.தாட்சாயன் (நல்லூர் சி.சி.த.க.பாடசாலை), எஸ்.ரென்சன் (கொக்குவில் ஞானபண்டிதா).

**100 மீற்றர்** - எஸ் சிவகாந் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஏ.கனீசியாஷ் (ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை), ஆர்.பிகதீபன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**நீளம் பாய்தல்** - எஸ்.மதூசன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஜே.சஜீகன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), எம்.பியூசன் (வண்.ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலம்).

**உயரம் பாய்தல்-** கே.சுதர்சன் (பெரியபுலம் ம.வித்தியாலயம்), எஸ்.சிவகாந் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.கோகுலன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

#### பெண்கள்

**75 மீற்றர்-** என்.சிந்துஜா (சென்.பெனடிக் றோ.க.), ஆர்.சரண்யா (கோண்டாவில் இந்து ம.வி.), எல்.சுபாஜினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை).

**100 மீற்றர்** - வி.துர்க்கா (நல்லூர் காசிப்பிள்ளை வித்.), என்.சிந்துஜா (சென்.பெனடிக் றோ.க.), எஸ்.சிந்துகௌரி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**நீளம் பாய்தல்** - ஜே.ஜெனூசா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), பி.ருக்சனா (பெரியபுலம் ம.வித்.), வி.துர்க்கா (நல்லூர் காசிப்பிள்ளை வித்.), கே.சரண்யா (ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை).

**உயரம் பாய்தல்** - ஏ.பிரியா (கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா), எஸ்.திவ்யா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), இ.பிரதிஷ்சா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்.).

### 13 வயதுப்பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர்-** பி.பங்குசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.ஆர்த்திகன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.டிலக்சன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**200 மீற்றர்** - எம்.கருணராஜ் (செங்குந்த இந்துக் கல்லூரி), ரி.டிலக்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.கிரிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்-** பி.பங்குஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ.யசிந்தன் (பெரியபுலம் ம.வித்), என்.பவதர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**4x100 அஞ்சல்-** கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.

#### பெண்கள்

**100 மீற்றர்** - எஸ்.பிரியங்கா (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), எஸ்.நயரா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.சரண்யா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்** - ரி.சரண்யா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வை.நிலூசா (பெரியபுலம் ம.வித்தியாலயம்), என்.ராஜேந்திரன் (இளையதம்பி வித்தியாலயம்).

**நீளம் பாய்தல** - வி.நிலூசா (பெரியபுலம் ம. வித்தியாலயம்) எஸ்.கொமிதாமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ்.துவராகா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - ரி.கௌசிகா (நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை), ஜீ.மரிநிசிதா (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), எஸ்.கௌதமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**4x100 அஞ்சல்** - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.

### 15 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர்** - கே.ரூபவினோத் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.கஜனோர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.செழியன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**200 மீற்றர்** - கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி), கே.நிஷாந் (செங்குந்த இந்துக் கல்லூரி), ஜீ.தினேஸ்வரன் (மெதடிஸ்த மிஷன் பாடசாலை).

**400 மீற்றா** - ரி. செழியன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.சதீசன் (யாழ்.இந்துக் கல்லூரி). வி.துஷ்யந்தன் (முத்துதம்பி வித்தியாலயம்).

**நீளம் பாய்தல்** - யூ.ராகுல் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), ஆர்.சதீசன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜே.ஈற்றன்வரஷ் (உயரப்புலம் ம.வித்தியாலயம்).

**குண்டு எறிதல்** -சி.கஜீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.பிரகாஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜே.ஜெயக்குமார் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை).

**தட்டு எறிதல்** - பி.ரூபவினோத் (யாழ்.இந்துக் கல்லூரி), இனோஜன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ். கஜீவன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜே.ஜெயக்குமார் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை).

**ஈட்டி எறிதல்** - கே.பிரகாஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.சுஜீவன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.தவசுதன் (முத்துத்தம்பி வித்தியாலயம்).

**4x400 அஞ்சல்** -யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாலயம்.

#### பெண்கள்

**100 மீற்றர்** - எஸ்.தஜீபா (கொக்குவில் இந்துக் கல்லூரி), யூ.... (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.... (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்** - யூ.கம்சினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), யூ.சோபினி (யாழ்.இந்துக் மகளிர் கல்லூரி), பி.தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்** - எஸ்.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லுரி), யூ.கம்சினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.குலசிங்கம் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**குண்டு எறிதல்** - கே.தமிழரசி (கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம்), ஆர்.அனுஷா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.தட்சாயினி (கந்தர்மடம் வித்தியாலயம்), ஆர்.தர்சலை (பூம்புகார் பாடசாலை).

**தட்டு எறிதல்** - ரி.சுதர்சினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) கே.நிவேதிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே.தமிழரசி (கனகரட்ணம் ம.ம.வித்.).

**ஈட்டி எறிதல்** - பி.துவராகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.அவன்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.சியாமளா (கனகரட்ணம் ம.ம.வித்.).

**4x400 அஞ்சல்** - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை. (3-203) *(வளரும்)*





கோண்டாவில் ஸ்ரீ வாகிஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகம் மாணவர்களுக்கு இடையே நடத்திய விளையாட்டுப் போட்டியில் பாலர் பாடசாலை மாணவர்களின் போட்டி ஒன்றில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சமநேரத்தில் பரிசில்களைப் போராளிகளும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களும் வழங்குவதையும்-

மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

Applications are invited from a young and energetic person in the capacity of a senior community support officer on temporary basis for five months, to provide and Co-ordinate Psychosocial care in Tsunami affected areas.

**The ideal Candidate should posses**

- Should possesa degree in recognized university
- Familiarity with social context of the community
- Good interpersonal skills
- Experience of community welfare activities
- Facilitation and negotiation skills
- Sensitivity to social and power relations (Gender, Caste, Class)
- Familiarity with Multisectoral approach
- Leadership skills
- Living within Kilinochchi District and should be able to work full time (i.c. 8 hrs per day)
- Preferable to posses motorbike and valid license.

◆ **Payment Rs. 500/- per day**

If you meet the above criteria, send your CV with names of two non related referees to reach us on or before May 14th 2005 and mark on top left hand corner of the envelop as 'SCSO'.

**Deputy Provincial Director of Health Services,**
**DPDHS Office,**
**Kilinochchi.**

(C/42526) (24-)


## இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஏப்.27

தென்மராட்சிப் பிரதேச ஆஸ்துமா நோயாளர்களுக்கான இலவச சிகிச்சை முகாம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி அம்பிகா மருந்தக வழிநடத்தலில் மானிப்பாய் கியூ மெடிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் சிகிச்சை முகாமினை நடத்துகின்றனர்.

சிகிச்சை முகாமில் கலந்துகொள்ளும் நோயாளர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுமென லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் அறிவித்துள்ளார். (த-117)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 4 விடைகள்

**நேற்றைய 'உதயனில்' வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.4 இற்கான விடைகள் வருமாறு:-**

வினாத்தாள் - I

(01) 2 4 1 3 5 (02) 1 5 2 4 3

(03)→(5)

2 4 6 8 2 ③ [2] 4 6 8 2 ③

ன ச க ம ஆ ம ன் அ இ ப ல ஈ

(06) 2 (07) 3

(08)
↓
(10)

| | | | |
|---|---|---|---|
| மு | து | கு | |
| | | ள் | |
| | கு | ள | ம் |
| | | ன் | |

(11) சம்பந்தர் (12) பர்வதம்

(13) 1 (14) 2 (15) 3 (16) 3 (17) 3

(18) 2 (19) 2 (20) 1 (21) 2 (22) 3

(23) 3

(24) பிரயாணஞ் செய்வதற்காக

(25) வெப்பத்திலிருந்து பாதுகாக்க

(26) செய்திகளை அறிவதற்காக

(27) 2 (28) 2 (29) 4 (30) 2

(31) 3 (32) 2 (33) 2 (34) 3 (35) 2

(36) 2 (37) 3 (38) 3 (39) 3 (40) 3

வினாத்தாள் - II

(01)
1) காலைக்காட்சி
2) நிகழ்காலம்
3) விண்மீன்கள்
4) சூரியன்
5) மேற்கோட்குறி
6) மெல்லமெல்ல
7) தங்கத்தகட்டைப் போல
8) நட்சத்திரங்கள் / தாரகைகள்
9) நடுவில்
10) இருள்
11) கூட 12) வைரத்தை
13) விரிகின்றது 14) அவளை
15) துணைவி 16) நிகழ்காலம்
17) மகிழ்ச்சியடைந்து / சந்தோசமுடன்
18) பலவின்பால்

(02)
1. வானம்
2. பூக்கள்
3. கிழக்கு 4. தாமரை

(03)
1) River 2) Colour
3) Telephone 4) Go there


(04)
1) 2 2) 3 3) 2
4) 3 5) 3

(05)
1) பீற்றூட் 2) கரட் 3) மரவள்ளி

(06)
1) கழுகு 2) கோழி 3) வாத்து
4) கொக்கு 5) மரங்கொத்தி
6) காகம்

(07)
1) முன்னால் வழுக்கும் வீதி

(08)
1) 100 புள்ளிகள்
2) 10.45
3) 24 m
4)



5) 7/8

(09)
1) (✓) 2) (×) 3) (✓) 4) (×) 5) (✓)

(10)
1) லீக்ஸ் 2) 5kg
3) 232 ரூபா 4) 53 kg
5) 56 ரூபா 6) 416 ரூபா
7) 392 ரூபா

(11)
1) நான் தம்பி
2) இது என்னுடைய கதிரை

(12)
1) பலதுறு 2) நம

(13)
1) 3 2) 2 3) 3 4) 2 5) 3

(14)
1) 253 2) 37 3) 544 ரூபா 4) 1.266
5) 52 பேர் 6) 33 பேர்

(15)
பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :
40x2 ½ = 100 புள்ளி

வினாத்தாள் II :
1) 18 புள்ளிகள்
2) 4 புள்ளிகள்
3) 4 புள்ளிகள்
4) 5 புள்ளிகள்
5) 3 புள்ளிகள்
6) 3 புள்ளிகள்
7) 1 புள்ளி
8) 10 புள்ளிகள்
9) 5 புள்ளிகள்
10) 14 புள்ளிகள்
11) 2 புள்ளிகள்
12) 2 புள்ளிகள்
13) 5 புள்ளிகள்
14) 12 புள்ளிகள்
15) 12 புள்ளிகள்


Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6018503 முதல் 6030382 வரை

சீட்டிழுப்பு இல. 128 திகதி 25-4-2005

வெற்றி எண்கள் **2 4 8 5 0 1** சுப்பர் எண் **12**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,41,11,625/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,41,11,625/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,053 | 500/- | 5,26,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,499 | 50/- | 5,24,950/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,04,071 | 10/- | 10,40,710/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 102 | 1,000/- | 1,02,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,055 | 100/- | 1,05,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,406 | 20/- | 2,08,120/- |
| மொத்தம் | 127,323 | | 61,95,380/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 61,95,380/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **2,44,03,625/-**

தொடர் இல. 7738845 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 28 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6028357-4-35
6023192-8-56
6021023-9-86
6018549-0-72
6025951-5-47
6025531-8-94
6026841-5-09
6024035-0-31


## வரணியில் அபிவிருத்தி

வரணி வடக்கு குறண்டிப்பிட்டி கிராமத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினரால் யு.என்.டி.பி. அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இக்கிராமத்தில் வீடமைப்பு, வீதிகள் புனரமைப்பு, குடிதண்ணீர்த் திட்டம், பொதுமண்டபம் அமைப்பு போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. நிறுவனப் பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு கிராம மக்களுடனான சந்திப்பினை மேற்கொண்டனர். (த-11)


# தேவை

யாழ். நகரிலுள்ள வியாபார ஸ்தாபனத்திற்குக் கணக்குப் பதியுநர் தேவை. விண்ணப்பதாரர் பெண் பிள்ளையாகவும், கணக்கியலில் க.பொ.த. உயர்தரம், டிப்ளோமா சித்தியுடன் அனுபவமும், கம்பியூட்டர் பயிற்சி பெற்றவராகவும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 2570**
(44695) (39-18-34-24) **மே/பா, உதயன்.**

# தேவை

யாழ். நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் பெண்பிள்ளையாகவும் க.பொ.த. சாதாரணதரம் (ஆங்கிலம், கணக்கியல் உட்பட) சித்தியுடன் அனுபவமும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 2571**
(44694) (39-18-34-24) **மே/பா, உதயன்.**

# SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

**2ஆம், 3ஆம் தொகுதிக்கான பயிற்சியும் பணி நியமனமும்**

**பயிற்சிக்காலம்** : 3 மாதங்கள். தினமும் 4 மணிநேரம், வாரத்தில் 5 நாள்கள **அல்லது** சனி, ஞாயிறுகளில் 4 மணிநேரம், 6 மாதங்கள்.

**கட்டணம்** : ரூபா 12,000/-

**கல்வித்தகுதி** : பட்டம் அல்லது க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடம் சித்தி

திறமை அடிப்படையில் முதலில் வரும் 40 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர். பயிற்சி முடிவில் எமது நிறுவனத்தில் பணிபுரிய விரும்பாதவர்களும் பயிற்சியில் சேரலாம்.

**சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழுடன் நேரில் வரவும்**

**SAAMSTECH** (44688) (18-34-24)

**TEACHERS TRAINING COLLEGE**

841, HOSPITAL Rd., CHUNDIKULI ,JAFFNA 021-4591571

# ENGLISH EXTERNAL DIPLOMA
## ஆங்கிலத் தொலைக்கல்வி டிப்ளோமா

**Batch : 253** Application Closing Date : **30.04.2005**

ஆசிரியர்கள், அலுவலர்கள், டாக்டர்கள், தாதிமார், பத்திரிகையாளர்கள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், பெற்றோர், இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப்பெண்கள், பாடசாலை மாணவர்கள் அனைவருக்குமான பாடநெறி.

**ஆங்கிலத்தில் கதைப்பதற்கான அடித்தளத்தினையும் தேவையான சொல்வளத்தினையும் விருத்திசெய்து கதைப்பதற்கான சூழலை உருவாக்குவதற்கான பாடநெறி**

**பாடநெறிக்கான கட்டணம் : ரூபா 1,000/-**

பாடநெறியினைப் பூர்த்திசெய்வோருக்கு ரூபா 1,000/- இற்கான புத்தகங்கள் மற்றும் ஒலிப்பயிற்சிக்கான **CD/CASSETTE** க்கள் முற்றிலும் இலவசம்

பெயர் மற்றும் முகவரியினை '**SAAMSTECH**' என்ற பெயருக்கு '**JAFFNA**' தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூ.1,000/- இற்கான காசுக் கட்டளையுடன் அனுப்பி அல்லது நேரில் சேரலாம். (44686) (18-34-24)

**SAAMSTECH, 841, HOSPITAL ROAD, JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவருக்குத் தொழில் உபகரணங்கள்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகத் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து தொழில் வாய்ப்புக்களின்றி வாழ்ந்து வரும் மக்களுக்கு ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டமிடல் இணைப்பாளர் பரமானந்தம் தலைமையில் இந்த உபகரணங்களைக் கையளிக்கும் வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டதையடுத்து, தமிழீழத் தேசியக்கொடி, தமிழர புனர்வாழ்வுக்கழகக் கொடி ஆகியன ஏற்றி வைக்கப்பட்டன.

தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைத்தீவு நகரத் தளபதி தினேஸ் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் இராமமூர்த்தி, கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் மரியதாஸ் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டச் செயற்பாடுகளில் ஒன்றான 'மீண்டும் கடலுக்குச் செல்லுதல்' என்ற செயற்றிட்டத் திற்கமையவே முல்லைத்தீவு மக்களுக்கான முதற்கட்ட மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மன், நோர்வே நிதிப் பங்களிப்புடன் இந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கடல்சார் இயந்திரவியல் சேவைகள் நிறுவனப் பணிப்பாளர் லோகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சிவனடியார், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முல்லைத்தீவு மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி ஆகியோர் உட்படத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (த)




## மின் தாக்கி மாடு பலி!

வட்டக்கச்சி,ஏப்.27

இராமநாதபுரம் 7ஆம் யூனிற் பகுதியில் மின் தாக்கி மாடு ஒன்று இறந்துள்ளது. கடந்த 22ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்பகுதியில் தனியார் ஒருவரால் இரவு வேளைகளில் குறிப்பிட்ட சில வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் அந்த மின்கம்பியொன்று அறுந்துவிழுந்ததிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது என்றும் கூறப்பட்டது. (த-405)

## வீதி புனரமைக்கப்படுகிறது

வட்டக்கச்சி,ஏப்.27

தருமபுரம் வைத்தியசாலையில் இருந்து கல்மடு ஊடாக இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் காணப்பட்டது. வட்டக்கச்சி ஊடாக முல்லைத்தீவு செல்வதற்கு பயணிகள் பஸ்கள் இவ்வீதியையே பயன்படுத்துவதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வீதி தற்போது சேரன் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (த-405)

## ப.நோ.கூ. சங்கத்துக்கு புதிய கட்டம்

வட்டக்கச்சி,ஏப்.27

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் ஆலடிக் கிளைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது. இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலைய வளாகத்தில் சனசமூக நிலைய செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

தற்போது இக்கிளை தனியார் கட்டடத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.(த-405)

# சமாதானச் சூழல் நிலைக்கவேண்டுமாயின் இடைக்கால நிர்வாகத்தை உடன் வழங்குக!

## கிளிநொச்சி வெகுஜன ஒன்றியம் வலியுறுத்து

கிளிநொச்சி,ஏப்.27

இப்போது நிலவுகின்ற சமாதானச் சூழல் நிலையானதாக இருக்கவேண்டுமாக இருந்தால் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக அலகினைக் கையளிப்பதற்குச் சர்வதேச சமூகம் ஆவனசெய்யவேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மேதினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் விடுத்துள்ள இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழினம் ஒரு தேசிய இனம். எமக்கென்று ஒரு பாரம்பரியம் உண்டு. இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அரசிற்கெதிராகப் போராடும் நாம் தொழிலாளர் நாளை எமது உரிமைகளை வென்றெடுக்கும் நாளாகக் கருதுகிறோம் தேசிய விடுதலைக்காக எம் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நாம் இன ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு ஏதிலிகளாக வாழ்ந்தோம்.

எம் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றுக் கூர்மையடைந்த நேரத்தில் சர்வதேசங்களின் ஆலோசனையில் ஆயுதப் போராட்டத்தைச் சற்று நிறுத்தி சமாதான வழியில் சமாதானச் சூழலைத் தோற்றுவித்தோம்.

எம் உரிமையைப் பாதுகாக்கக்கூடிய நிலையில் இந்தச் சூழல் அமையும் என்ற நம்பிக்கையில் அச்சூழலைப் பாதுகாத்துக் கொள்கிறோம்.

இச்சூழல் நிலையானதாக இருக்க விரும்பிய சர்வதேச சமூகம் எமக்கு ஏற்ற ஓர் இடைக்கால நிர்வாக அலகினை உருவாக்கி, எமது உரிமைகளைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

எத்தகைய சர்வதேச அழுத்தங்களுக்கும் அடிபணிய மறுக்கும் சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் இச்சமாதான சூழலில் ஓர் இடைக் காலத் தீர்வை ஏற்படுத்தப்போவதில்லை என்ற நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

எனவே, எமது உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமாயின் - எமது உரிமைகள் நிலை நிறுத்தப்பட வேண்டுமாயின் - மே நாளினை எமது உரிமைக்கான நாளாகவே நாம் கருதுவோம்.

எம் உரிமையை வென்றெடுப்பதற்கு மீண்டும் எம்மைப் போராட்டத்துள் தள்ளவேண்டாம் என்பதைச் சர்வதேச சமூகத்திடம் நாம் ஒன்றுபட்டு வேண்டுகோள் விடுக்கிறோம் - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மல்லாவியிலும் முள்ளியவளையிலும் தனித்தனியாக மேதின ஊர்வலங்கள்!

## ஊர்திகளுக்குப் பரிசில்; எழுச்சிப் பேரவை ஏற்பாடு

புதுக்குடியிருப்பு,ஏப்.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, மல்லாவி ஆகிய பிரதேசங்களில் இரு பிரிவுகளாகச் சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 22 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலகத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்விலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மே தினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு முள்ளியவளை 3ஆம் கட்டையில் மேதின ஊர்வலம் ஆரம்பமாகி வித்தியானந்தாக் கல்லூரியை வந்தடையும். அதேநேரத்தில் மல்லாவியிலும் ஊர்வலம் நடைபெறும்

இதற்கான ஊர்திகள் அமைப்பில் முதல் பத்து ஊர்திகளுக்குச் சான்றிதழ்களும் முதல் மூன்று ஊர்திகளுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.வேழினி, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-353-203)



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள தாளையடி, வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

குடிதண்ணீர் வழங்குவதற்காகப் புதிய தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கியைப் படத்தில் காணலாம். *(படம்: பரந்தன் செய்தியாளர்)*

# புளியங்குளம் பொதுமண்டபத்தில் பெண்களுக்கான பயிற்சிப் பட்டறை

புளியங்குளம்,ஏப்.27

வவுனியா மாவட்ட பெண்கள் புனர்வாழ்வு நிறுவனமும் 'போரூட்' நிறுவனமும் இணைந்து 'பெண்களைச் சக்திப்படுத்தல்' என்னும் பொருளில் பயிற்சிப் பட்டறை ஒன்றினை அண்மையில் புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தியுள்ளன.

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி நகுலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மங்கள விளக்கினைப் புளியங்குளம் பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் கந்தசாமி ஏற்றினார்.

தியாகதீபம் அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினைப் புளியங்குளம் மாதர் சங்கப் பொருளாளர் திருமதி க.தவமலர் ஏற்றினார். தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

'பெண்களும் சட்டமும்', 'பால்நிலைச் சமத்துவம்' ஆகிய பொருள்களில் மகளிர் அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்க்கவி கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பெருமளவில் ஆண்களும் கலந்துகொண்டிருந்தனர். (த-204)

# 'நியாப்' திட்ட அபிவிருத்தி வேலைகளை உலகவங்கிப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

பரந்தன்,ஏப்.27

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள நகேந்திரபுரம் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காகக் கடந்த 22ஆம் திகதி உலக வங்கியின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்துடன் இணைந்து மேற்படி பிரதிநிதிகள் இந்த வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், மக்களின் பயன்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்தும் அறிந்துகொள்வதற்காகவே உலக வங்கிப் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர்.

வேலைத் திட்டங்களைப் பார்வையிட்ட உலக வங்கிப் பிரதிநிதிகள் நாகேந்திரபுரம் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர்.

நிகழ்வில் உலக வங்கியின் பிரதிநிதிகளான வில்லியம் சொரன்சஸ், ராஜ்குமார் மல்கோத்திரா, சூரியநாராயணன் சதீஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றிவைத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் சி.வினோதராசா நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். கண்டாவளைப் பிரதேச செயலர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் உட்படப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

நாகேந்திரபுரம் கிராமத்தில் நியாப் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 35ஆயிரம் ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபமும் 3லட்சத்து 787 ஆயிரம் ரூபா செலவில் கிணறும் அமைக்கப்பட்டுள்ளன. 39 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீதிகளும் 11 லட்சம் ரூபா செலவில் குளங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (த-352-203)

# அரும்பொருள் காப்பு மையம் பூநகரியில் அமைக்க ஏற்பாடு

கிளிநொச்சி,ஏப்.27

பூநகரிப் பிரதேசத்தில் அரும்பொருள் காப்பு மையம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

1993ஆம் ஆண்டு பூநகரியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட 'தவளை' நடவடிக்கைமூலம் தாக்கி அழிக்கப்பட்ட போர்த்தாங்கியை மையப்படுத்தி இந்த அரும்பொருள் காப்பு மையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைத் தமிழீழ அரசியல்துறையின் அரும்பொருள் காப்பு மையத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பூநகரியில் பழமைவாய்ந்த கோட்டையில் இதர அரும்பொருள்கள் காணப்படுகின்றன. இந்த நிலையில், அங்கு அரும்பொருள் காப்பு மையம் திறந்து[illegible] பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA DIRECTORY விரைவில் ....

**யாழ். மாவட்டத்திற்கான முழுமையான தொலைபேசி மற்றும் முகவரிக் கோவை**

கல்வி, வியாபார, கணனி நிலையங்கள், பாடசாலைகள், அதிபர்கள், வைத்தியசாலைகள், வைத்தியர்கள், அரச அலுவலகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், கோயில்கள், முகவர்கள், விநியோகத்தர்கள் அடங்கலாக அனைத்து விவரங்களும்......

(44682) (14-34-26)

## பண்ணை முகாமையாளர்

### கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் - அச்சுவேலி

01. கல்வித் தகைமை:
விவசாய / விலங்கு விஞ்ஞான சான்றிதழ் அல்லது அதற்கு இணையான / மேற்பட்ட தகைமைச் சான்றிதழ்.

02. அனுபவம்:
- கோழிப்பண்ணை முகாமையில் குறைந்தது ஒரு வருட அனுபவம்.
- மின்வலுவில் குஞ்சு பொரிக்கும் எந்திரத்தைக் கையாளுவதில் குறைந்தது ஆறு மாத அனுபவம்.

03. பிற தகைமை:
மோட்டார் சைக்கிள் செலுத்துவதில் அனுபவம், அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் அவசியம்.

04. விசேட குறிப்பு:
04.1. அச்சுவேலியில் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் அமைந்துள்ள பண்ணை முகாமையாளருக்கான விடுதியில் தங்கியிருந்தல் வேண்டும். வாடகை அறவிடப்படமாட்டாது.
04.2. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் முன்பு தொழில் புரிந்திருப்பின் இறுதியாகத் தொழில்செய்த நிறுவனத்திலிருந்து விடுவித்தமைக்கான காரணம் உள்ளடங்கிய கடிதம் நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

05. நியமனம்:
ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

06. சம்பளம்:
திரட்டிய மாதச் சம்பளமாக ரூபா 8,500/- வழங்கப்படும். (ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)

07. விண்ணப்ப முடிவு திகதி: *07-05-2005*

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவிரும்புபவர் தனது விண்ணப்பத்தைப் பூரண சுய விவரத்துடன் தனது கைப்பட எழுதப்பட்ட விண்ணப்பக்கடிதத்துடன் 07.05.2005 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் வைக்கவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "*பண்ணை முகாமையாளர்*" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் அவசியம்.

தலைவர்,
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி-42523) (24-14-34-26)

## இன்றைய வெளியீடு
### CD City

**A.C.D. (ஓடியோ CD)**

(1) அந்நியன் } சியான் விக்ரம் } நடித்தது
(2) காற்றுள்ளவரை

**CD City**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(ராஜா திரைக்கு முன்பாக)

(44699)(26-14-34)

சென்.ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் உப அதிபர்
**அமரர் J.T.செல்லையா** அவர்களின்
வாழ்வுக்கும் சேவைக்குமான

## இரங்கல் வழிபாடு

தோற்றம்: 17-09-1915 மறைவு: 25-04-2005

காலம்: சனிக்கிழமை (30-04-2005) பி.ப. 5மணி
இடம்: (சென்.ஜோன்ஸ் ஆலயம்), சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
பழைய மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்த இரங்கல் வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி-42527) (26-14-34)

## M.M.C.C. வழங்கும்
### பத்திரிகையாளர் டிப்ளோமா பயிற்சிநெறி

அநேக மாணவர்களின் நீண்டநாள் வேண்டுகோளுக்கு இணங்க பத்திரிகையாளர் டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.

▲ இப்பயிற்சிநெறி 4 மாதங்களை உள்ளடக்கியது.
▲ இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்பவர்களுக்கு வயதெல்லை கிடையாது.

ஆரம்பம்: பிரிவு I 15-05-2005
பிரிவு II 22-05-2005

தற்போது எமது நிறுவனத்தினால் இப்பயிற்சி நெறிக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. பதிவுகளை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.
மேலதிக விவரமறிய அழையுங்கள். 0776910612, 0776193181.

**M.M.C.C.**
இல.328, ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(44698)(26-14-34)

## உடனடி வேலைவாய்ப்பு

**Hardware Technician and IT Lecturer**

பருத்தித்துறையில் இயங்கும் கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனி திருத்துவதிலும், Hardware, Ms Office, Photoshop, Page maker, HTML போன்ற பாடநெறிகள் கற்பிப்பதிலும் ஆற்றல் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை. பூரண விவரங்கள் அடங்கிய சுய விவரக்கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்கு 10-05-2005 இற்கு முன் அனுப்பவும்.

Chief Executive Officer,
Jeyantha Computer Park,
75/22, Thumpalai Road,
Sivankovilady, Point Pedro.
Phone: 077 7482339
Email: tsenthan@yahoo.com (44696)

## ஐ.தே.க. ஒருங்கிணைப்பாளராக ஜயலத் நியமனம்

திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஒருங்கிணைப்பாளராக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்குறிப்பிட்ட இடங்களில் இவர் முன்னெடுக்கவுள்ளார்.

இதேவேளை, டாக்டர் ஜயலத் ஜயவாத்தன ஐக்கிய தேசியக் கட்சியின் நிவாரண, மனித உரிமைகள் சங்கத் தலைவராக ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவினால் தெரிவுசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-202)

## அதிபர்களுக்கான முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கேட்டுள்ளார். (த-7)

# FREE SEMINAR ON CITY & GUILDS PROGRAMMES IN JAFFNA

City & Guilds

City & Guilds, the world renowned institute offering internationally recognized vocational qualifications is now open for students in Jaffna. We invite you to participate at our public awareness programme and be enlightened on City & Guilds.

**Date: 30th April 2005 starting from 10.30 a.m.** **Venue: Jaffna Central College - Tamber Hall**

**City & Guilds most popular fields of studies :**
- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering
- Construction Industry
- Motor Vehicle Engineering
- Mechanical Engineering

**Target Audience**
- G.C.E. O/L & A/L Students
- School Leavers
- Those who wish to follow a City & Guilds programme

**THE PROGRESSION ROUTE (ENGINEERING)**

Skills Foundation → Skills Proficiency → City & Guilds Craft Certificate → City & Guilds Craft Diploma → City & Guilds Craft Advanced Diploma

G.C.E. (O/L) → 6 Months → City & Guilds Technician Certificate (Technician) → 1 Year → City & Guilds Technician Diploma (Senior Technician) → 1 Year → City & Guilds Technician Advanced Diploma (Asst.Engineer/Engineer) — HND Equivalent

G.C.E. (O/L) → 2 ½ Years → G.C.E. (A/L) → Engineering Council Certificate CEI (Part I) → 2 Years → Engineering Council Graduate Diploma CEI (Part II) (Graduate Engineer) → 2 Years → Engineering Council Post Graduate Diploma (Chief Engineer)

An opportunity to become a Chartered Engineer

**For further details contact:**

**Jaffna Technical Institute**
No. 7 Palali Road, Jaffna.
Tel : 021 2223335

**APSS International**
57, E. S. Fernando Mawatha,
Colombo 6.
Tel : (011) 2506803 / 2361587
E-mail: kcbose@sltnet.lk

**City & Guilds International**
Level 6, Access Towers
#278 Union Place, Colombo 2.
Tel : (011) 5361427/8

ARTBOX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தென்புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட

## Dr. பரமு கிருஷ்ணபிள்ளை

அவர்களின் திடீர் மரணச் செய்தியை அறிந்ததும் மிகவும் வேதனை அடைகிறேன்.

அன்னார் மூர்த்தி அம்புலம் சிவன் ஆலய தர்மகர்த்தாவும், சமூகத் தொண்டரும், பண்பும், பாசமும் கொண்டவர். பக்குவமாய் பண்பாக அறிவுரைகள் கூறுபவர். இப்படிப்பட்ட நல்ல ஒரு மனிதரை மனிதர் மட்டுமல்ல ஒரு சிறந்த வைத்தியரை தென்புலோலி மட்டுமல்ல இந்த நாடே இழந்துவிட்டது. இவரின் இழப்பை ஈடுசெய்யமுடியாது. அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி (கமலம் அக்கா) மற்றும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இலட்சுமணன் தோட்டப் பிள்ளையாரையும் மூர்த்தி அம்புலம் சிவபெருமானையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ பா.இலட்சுமணன் ஐயர்,
செயலாளர், தும்பளை இலட்சுமணன் தோட்டப்பிள்ளையார் ஆலய தொண்டர்சபையும் ஆலய பிரதமகுருவும்
மூச்சம்புலம் சிவன் ஆலய முன்னாள் பிரதமகுருவும்.

(சி-42533)(38-17-12)

# விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்.நகரில் இயங்குகின்ற வியாபார நிறுவனத்துக்கு அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதி (ஆண்) தேவை. சுயவிவரக் கோவையுடன் தபால் மூலமோ அல்லது நேரிலோ எதிர்வரும் 01.05.2005 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

**S.M.S World (PVT) Ltd.,**
291,பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 021 4590807

(சி-42519)(38-17-12)

# 15 ஆவது நினைவு நாள் அஞ்சலி

## அமரர் கந்தையா மணிமேகலை

(வேலணை கிழக்கு, வேலணை)

தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றும் **திரு. கந்தையா குகனேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா மணிமேகலை**

அவர்கள் அமரத்துவமடைந்த 15 ஆவது நாளில் எங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்து, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம்.

(44697)(38-17-12)

# மரண அறிவித்தல்

## செல்வி லபீந்திரன் யமுனா



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வி லபீந்திரன் யமுனா 24.04.2005 அன்று காலை அகாலமரணமானார்.

அன்னார் லபீந்திரன் - பேரின்பராணியின் அன்பு மகளும் கேனுஷா, சுலக்ஷனா, கனிஸ்ரன், லக்ஷனா, நிர்ஷனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணரெத்தினம் - சுந்தராம்பாள், முத்தையா - இராசாங்கம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2005) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.லபீந்திரன்
(இந்திரன் - தந்தை)

*பருத்தியடைப்பு,*
*ஊர்காவற்றுறை.*
(44710)(38-17-12)

# நாய் குறுக்கே ஓடியதில் நிலைதடுமாறி விபத்து!

சுதுமலை,ஏப்.27

மோட்டார் சைக்கிளில் சென்றவர் நாய் குறுக்கே ஓடியதால் நிலைதடுமாறி விபத்திற்குள்ளானார்.

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டையில் நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

முகமாலை வடக்கைச் சேர்ந்த செல்லையா இராசரத்தினம் என்பவரே இவ்வாறு விபத்திற்குள்ளானவராவார். (எ-ரி)

# பயிற்சி நெறி

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர முறையிலான தோற்பொருள் உற்பத்திப் பயிற்சி நெறிக் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தோற்பொருள் அபிவிருத்தி பிரிவினால் வதிரி கிராமத்தில் நடைபெறுகின்றது.

பாதணி, சப்பாத்து, பாடசாலைப்பை, கைப்பை போன்றன நவீன தொழில்நுட்ப ரீதியில் குறைந்த செலவில் எவ்வாறு உற்பத்தி செய்யமுடியும் என்பது பற்றி பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

பயிற்சி பெற விரும்பும் கரவெட்டிப் பிரதேச தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புவோர் வதிரி தேவரையாளி பாடசாலைக்கு அண்மையிலுள்ள தமிழ் மன்றத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (44707)(38-17-12)

**பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.**




கலாநிதி
க.குணராசாவின்
மேற்பார்வையில்
பிரியா
பாலேந்திரனின்
புவியியல்
தரம் - 7
வெளிவந்துவிட்டது.

பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம்: யாழ்ப்பாணம்.

(44704)(38-17-12)

**ராஜா** யாழ்ப்பாணம்

பிரவீன், ரீமாசென், பரத், விவேக் நடித்த

## செல்லமே

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30 9.30 (பு.நே)

விரைவில் 4 ஸ்ருடன்ஸ்

(C/41381)(38-16-17)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

யுவராஜ், சங்கீதா, விவேக் நடித்த,

## தகதிமிதா

கா.நேரம்:
10.30.2.30. 6.30. 9.30 (பு.நே.)

(C/41496)(33-11-46)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விஜய், ஹரிணி, வடிவேல் நடித்த

## சச்சின்



காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இரண்டாவது வெற்றி வாரம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



காட்சிகள்:
11.00. 3.00. 7.00
10.00. (பு.நே.)

அரிய சந்தர்ப்பம்!!

# GAMA அபாக்கஸ் வழங்குகிறது

⇨ புலமைப் பரிசில் பரீட்சையில் அதி உயர் புள்ளி பெற்று சித்தி பெற....
⇨ உங்கள் குழந்தைகளின் ஞாபக சக்தி அதிகரிக்க ....
⇨ பாடசாலைக் கல்வியில் வேகமும் துல்லியமும் பெற்றிட....

## உத்தரவாதம் தருகின்றோம்!

தங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்கான விஷேட

**கருத்தரங்கு**

இடம்:- யாழ்.இந்துக்கல்லூரி - குமாரசுவாமி மண்டபம் காலம்: - 28-04-2005 பி.ப. 3.30 மணி.

GAMA அபாக்கஸ் பயிற்சி பெறும் குழந்தைகள் நேரடியாக பங்குபற்றும் நிகழ்ச்சி

★ உங்கள் சந்தேகங்களுக்கு உடனடித் தீர்வு ★உத்தரவாதங்களை நிரூபித்துக் காட்டுகின்றோம்.
★ உங்கள் கேள்விகளும் குழந்தைகளின் பதில்களும்

248 + 432 + 516 + 153 + 699 = ? கண்ணிமைக்கும் நேரத்தில் பதில் தரும் குழந்தைகள்.

⇨ இது ஏமாற்று வேலையல்ல! பயிற்சிமூலம் உங்கள் குழந்தைகளாலும் முடியும்.

| | | | |
|---|---|---|---|
| நிலவு.Com | | KMC ADVENTIST INTERNATIONAL PRE-SCHOOL | பராசக்தி அச்சகம் |
| 275, யாழ்.வீதி,மானிப்பாய் 0777740413 | FOCUS NET CAFE 120, அரசடி வீதி, யாழ்ப்பாணம். | 250, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 0776412360 | 78, K.K.S வீதி, [illegible] சந்தி |

(சி-42531)(38-17-42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(செல்வராசா)



மாரீசன்கூடல், சீந்திப்பந்தலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (செல்வராசா) அவர்கள் 25.04.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லில்லியின் அன்புக் கணவரும் அருமைத்துரை, இராசதுரை, றமணி, ஜசிந்தா, வேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் றோஸ் மலர், நிர்மலா, துரை, றொணி, றமேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (27.04.2005) புதன்கிழமை பி.ப.4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கயித்தார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் மாரீசன்கூடல் புனித கையித்தார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சீந்திப்பந்தல்,*
*மாரீசன்கூடல்.*
(44701)(38-17-12)

## திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

(வைரமுத்து கராஜ்)



வதிரி கோட்டைத் தெருவைச் சேர்ந்த திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் 24.04.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் (வைரமுத்து கராஜ்) அவர்களின் அன்பு மனைவியும் பாலாம்பிகை, யசோதாம்பிகை, சுபாம்பிகை, யோகாம்பிகை, சிவராம், செந்தில்வேல், ஜனாதனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாலு, கீர்த்தன், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2005) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சுப்பிரமணியம் (கணவர்)
(வைரமுத்து கராஜ்).

*'அம்பிகைவாசா'*
*வதிரி, கரவெட்டி.*
*T.P: 0777567412*
(44702)(38-17-12)

## திருமதி கார்த்திகேசு தெய்வானை



அனலைதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1/13, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை, தற்போது 93/13 இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு தெய்வானை நேற்று (26.04.2005) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் அம்பலவாணர் தம்பதியின் மூத்த மகளும் கந்தையா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகாம்பிகை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தம்பையா மற்றும் சுந்தரம் (கனடா), மயில்வாகனம், இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கந்தசாமி, யோகேஸ்வரி, கணேசலிங்கம் (ராசன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி, சாந்தினி காலஞ்சென்ற சின்னராசா ஆகியோரின் மாமியாரும் கேசிகா, சாருஜன், சாருஜா, பிரதீபன் ஆகியோரின் அப்பம்மாவும் சாந்தி, குகபரன், மைதிலி ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மயில்வாகனம்
(மைத்துனர்).

*93/13 இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
(44705)(38-17-12)

## திருமதி வீரசிங்கம் குழந்தையார்

(இளைப்பாறிய ஆசிரியை, இடைக்காடு மகாவித்தியாலயம்)



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் குழந்தையார் நேற்று (26.04.2005) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் வீரசிங்கம் அவர்களின் துணைவியாரும் குணேஸ்வரி (சௌந்தரம் - கொழும்பு), குணானந்தலஷ்சுமி (அமுதம் - இடைக்காடு ம.வி), குணரஞ்சிதன் (ரஞ்சன் - பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), குணசேகரம் (குஞ்சன் - ஆசிரியர், கொ/மாளிகாவத்தை மகா வித்தியாலயம்), குணேந்திரா (மலர் - ஆஸ்திரேலியா), குணராகினி (சோதி - அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினராசா (Rtd - Technical Officer - கொழும்பு), இராமச்சந்திரன் (ஆசிரியர், இடைக்காடு மகாவித்தியாலயம்), சாந்தினி (ஆஸ்திரேலியா), சந்திரமணி (ஆசிரியர் காரைதீவு மகாவித்தியாலயம்), புண்ணியலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சுதாகர் (Institute of Grade Testing - கொழும்பு), நிசானி (ஆஸ்திரேலியா), தமிழினி (ஆஸ்திரேலியா), தமிழ்ச்செல்வன், துவாரகா, அழகுநாச்சியார், சின்மயன் (காரைதீவு மகா வித்தியாலயம்), [illegible]ருந்தா (ஆஸ்திரேலியா), பிரியங்கா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மகாவித்தியாலய வீதி,*
*இடைக்காடு,*
*அச்சுவேலி.*
(44706)(38-17-12)

## தமிழ் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டவர் என்று பொலீஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இப்பகுதிக்கு மேலதிகமாக வரவழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொலீஸாரும் கூட்டாகப் பாரிய தேடுதலில் ஈடுபட்டார்கள். எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. கொல்லப்பட்டவர் கருணா அணி உறுப்பினராக அல்லது ஆதரவாளராக இருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். (க-3)

## மேல்மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர், தீப்தி ராஜபக்ஷ, ஆளுநரின் நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்தார்.

ஆளுநர் என்ன நடவடிக்கையை மேற்கொண்டாலும் முதலமைச்சர் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென்று உறுதியாகக் கூறினார்.

மாகாணசபை அமர்வுகள் ஒத்தவைக்கப்பட்டதை நாம் கண்டிக்கிறோம். இதனை அனுமதிக்கமுடியாது. அதேபோல் முதலமைச்சரை விசாரிக்கக் குழு அமைக்கப்படுவதையும் ஏற்க முடியாது. இவ்வாறான ஒரு விசாரணையை நாம் எவரும் கோரவில்லை. சபை அமர்வுகளை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. சட்டப்படி இந்த விடயத்தில் ஜனாதிபதியோ, ஆளுநரோ தலையிட முடியாது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மாகாண முதலமைச்சர் முகங்கொடுத்திருக்க வேண்டும். அதுவே முறையானது.

அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை நாம் ஏற்கமாட்டோம். இந்த மூன்று வார காலத்திற்குள் முதலமைச்சர் தனது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும். இல்லாதவிடத்து மூன்று வாரத்திற்குப் பின்னரும் நாம் எமது எதிர்ப்பைத் தொடர்வோம். மாகாணசபை அமர்வுகளை அரசு ஒத்திவைத்தமை நாகரிகமற்ற செயலாகும்.

இவ்வாறு மேல்மாகாணசபை உறுப்பினர் வருண தீப்தி ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

மேல்மாகாணசபையில் அரசின் பிரதான பங்காளியாக இருந்துவரும் ஜே.வி.பி. முதலமைச்சர் பதவி விலகவேண்டும் அல்லது அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் என நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## ஜெயரட்ணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயரட்ணம் புலிகளால் கடத்தப் பட்டிருக்கலாம் என அவரின் மனைவி சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி கூறுகையில்:- காணாமற்போனார் எனத் தெரிவிக்கப்படுபவரின் மனைவி அவரைத் தேடித்தருமாறு கோரும் விண்ணப்பத்தை எம்மிடம் நிரப்பித்தந்துள்ளார்.

விண்ணப்பத்தின் படி நாம் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளோம். அவரின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம். ஒரு கிழமை பார்ப்போம், பதில் வராவிடின் இன்னும் ஒருமுறை கடிதம் அனுப்புவோம். இதுதான் எமது வழிமுறை. அதனை நாம் பின்பற்றுவோம் - என்றார். (க-3)

## நாட்டைப்பிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. நேற்றுக் காலை நடத்தியது. கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். இந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றின் அடிப்படையே இந்தப் பொதுக்கட்டமைப்பு என நாம் கருதுகிறோம். புலிகள் தனி அரசொன்றுக்குச் செல்வதற்கான பாலமாகவே இந்தப் பொதுக்கட்டமைப்பு இருக்கிறது. விடுதலைப் புலிகள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அமைப்பு அல்ல. அவ்வாறான ஓர் அமைப்பிற்கு நிதியைப் பகிரும் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நிலைமை என்னவாகும்?

விடுதலைப் புலிகளிடம் வெளிப்படைத் தன்மை கிடையாது. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களைக் குறைந்த பட்சம் விடுதலைப் புலிகளின் தலைவர் நேரில் சந்தித்தாரா? ஆறுதல் கூறினாரா? எனவே, இவர்களை எப்படி நம்புவது? இந்த உத்தேச பொதுக் கட்டமைப்பை சிறுபான்மையின அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் எதிர்க்கின்றனர்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்று சர்வதேச சமூகம் அழுத்தம் தருகிறது. ஆனால், விடுதலைப் புலிகள் தொடர்பில் உத்தரவாதமொன்றை வழங்க சர்வதேச சமூகத்தால் முடியவில்லை. எனவே, இவ்வாறான உத்தரவாதமொன்றை வழங்கமுடியாத சர்வதேச சமூகம் அரசுக்கு இவ்வாறு அழுத்தத்தை வழங் குவதில் அர்த்தமில்லையென்பது ஜே.வி.பியின் நிலைப்பாடாகும் - என்றார் ஜே.வி.பி. தலைவர். (க-3)

## புலிகள் தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை அந்த நிலைமாறி தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துத் தாம் எடுத்துக் கூறியவற்றை அந்த நாடுகள் உன்னிப்பாகச் செவிமடுத்ததாகவும் -

எனினும், ஒரு சில இடங்களில் தம்மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டதாகவும் - தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு கடந்த வாரம் தாயகம் திரும்பினார் தமிழ்ச்செல்வன். தனது விஜயம் குறித்துக் கிளிநொச்சியில் நேற்று அவர் உதயன் செய்தியாளருக்கு கருத்துத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். தமது அரசியல் விவகாரக் குழுவின் ஐரோப்பியப் பயணம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு நாம் சென்றதற்கும் இம்முறை நாம் மேற்கொண்ட விஜயத்துக்கும் பாரிய இடைவெளி காணப்பட்டது.

முன்னர் ஐரோப்பிய நாடுகளில் அதிகார மட்டத்தில் கீழேயுள்ளவர்களையே - அதாவது, பிரதி அமைச்சர்கள் தரத்தில் உள்ளவர்கள், அமைச்சு அதிகாரிகள் ஆகியோரையே - எம்மால் சந்திக்க முடிந்தது. இம்முறை அந்தந்த நாடுகளின் அரசியல் உயர் தலைவர்களை - அதாவது அமைச்சர் மட்டத்தில் உள்ளவர்களையும் - சந்தித்துப் பேசினோம்.

இந்தச் சந்திப்புக்களில் எமது தரப்பு நியாயங்களை அவர்களுக்கு எடுத்து விளக்கக் கூடியதாக இருந்தது. இலங்கை அரசு கூறியவற்றை மட்டும் அல்லாது நாம் கூறியவற்றையும் அவர்கள் இம்முறை கூர்ந்து - அவதானித்து - கேட்டார்கள்.

முன்னர் போன்று எம்மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து அவர்களிடம் இருந்து பெரிதாகக் கேள்விகள் எழுப்பப்படவில்லை. எமது தரப்பு நியாயப்பாட்டையும் உன்னிப்பாகக் கேட்டனர்.

ஆழிப்பேரலையின் பின்னரான மீள்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வேத் தரப்பு ஊடாக அரசு முன்வைத்த பொதுக்கட்டமைப்பின் நகலை நாம் சந்தித்த ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளிடம் சமர்ப்பித்தோம்.

எந்தளவு விட்டுக் கொடுப்புடன் நாம் பொதுக் கட்டமைப்பிற்கு இணங்கினோம் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உதவிகளின் தேவைகளையும் தெரியப்படுத்தினோம்.

சிறுவர்களைப் படைகளில் இணைப்பது தொடர்பாக அவர்கள் எம்மிடம் கேட்டனர். யுத்தத்தால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கைத்தரம் தொடர்பாகத் எம்மால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்றை அவர்களிடம் சமர்ப்பித்து எமது தரப்பு நிலைப்பாட்டை விளக்கினோம்.

சமாதான காலத்தில் நாம் விமானப் படையை உருவாக்கி அதனை விரிவுபடுத்தியுள்ளோம் என்ற அரசின் குற்றச்சாட்டுக் குறித்தும் எம்மிடம் சில நாடுகளில் கேள்வி எழுப்பின.

அது குறித்த எமது விளக்கத்தை அவர்களுக்குத் .தெரிவித்தோம். நாம் விமானப் படையை சமாதான காலத்திற்கு முன்னரே உருவாக்கியிருந்தோம் என்பதை அந்த நாடுகளுக்குத் தெளிவுபடுத்தினோம்.

1998ஆம் ஆண்டு மாவீரர் நாளில் துயிலும் இல்லம் மீது எமது விமானம் பூமாரி பொழிந்தது. இது பற்றிய செய்திகளும் படங்களும் அப்போதே வெளியாகி விட்டன. அப்போதே நாம் விமானப்படையை உருவாக்கி விட்டோம். சமாதான காலத்தில் நாம் புதிதாக எதனையும் பெற்றுவிடவில்லை என்பதையும் அவர்களுக்குப் புரியவைத்தோம்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் எமது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அமைதி நிலையால் தமது வாழ்வில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படாததனால் மக்கள் விரக்தி அடைந்துள்ளார்கள். அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்ற செய்தியையும் எமது விஜயத்தின் போது சர்வதேச சமூகத்திற்கு அழுத்திச் சொல்லியுள்ளோம்.

சமாதான முயற்சிகளின் இந்தத் தேக்க நிலைக்குக் காரணம் இலங்கை அரசின் அக்கறையற்ற போக்கே என்பதையும் சுட்டிக் காட்டினோம்.

- இப்படித் தமிழ்ச்செல்வன் கூறினார். (க-3)

## அடையாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நேற்று நடைபெறவிருந்தது. சாட்சிகளான மூன்று பெண் போராளிகளும் சமுகமளிக்காததால், நீதிவான் ரீ.எம்.மாணாங் வழக்கை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள ஜோன்சன் ஜெயசாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (3)

## மன்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறங்குதுறையில் நேற்றுமுன்தினம் மாலை வந்திறங்கிய கவிராஜ் என அழைக்கப்படும் சண்முகராசா தயாணந்தராசா என்ற போராளியே பொலீஸாரால் சோதனை செய்யப்பட்டார். அவர் வசம் 19 ஆயிரம் ரூபா பணம், ஒரு தொகைப் படங்கள், ஒருசயனைட் குப்பி ஆகியன இருந்தன.

அவரைக் கைது செய்த பொலீஸார் சட்டவிரோதமான பொருளான சயனைட்டை வைத்திருந்தார். எனத் தெரிவித்து மட்டக்களப்பு நீதிவான் எம்.எச்.எம்.அஜ்மீர் முன் ஆஜர் செய்தனர்.

இவரை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (க-3)

## தயாமோகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சோதனையிட்டனர். குறிப்பிட்ட வாகனத்திற்குரிய ஆவணங்கள் அச்சமயம் அவர்களிடம் இருக்கவில்லை. அதையடுத்துக் காரிலிருந்த பாக்கியராஜா திருநாவுக்கரசு (தயாமோகன்), அரியரட்ணம் அரியநாயகம் ஆகிய இருவரையும் பொலீஸார் கைதுசெய்தனர். நேற்றுப் பகல் அவர்கள் மட்டக்களப்பு நீதிவான் எம்.எச்.எம். அஜ்மீர் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரையும் 25ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கை அடுத்தமாதம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அந்தத் தவணையில் வாகனத்துக்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்கப் போராளிகள் உறுதியளித்தனர். (க-3)

## 3 வாரத்துள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கலந்துரையாடியபோது ஜனாதிபதி இந்த விடயங்கள் குறித்துப் பரிசீலித்தார் எனக் கூறப்படுகிறது. மேல்மாகாண முதலமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குதவற்கு ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ள சூழ்ச்சி மற்றும் இதற்கு ஆளுங் கட்சியிலுள்ள ஒரு குழுவினர் வழங்கும் ஆதரவு என்பன குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியிருக்கும் முதலமைச்சர்கள் இதனை முறியடிப்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவார்கள் எனவும் உறுதியளித்திருக்கின்றனர். என்ன பிரச்சினைகள் இருந்தாலும் மாகாண சபையைக் கலைப்பது இதற்குத் தீர்வாக அமையாதென்று முதலமைச்சர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## போதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் ஒன்றான ஆஸ்பத்திரி வீதி வழியாகச் சென்றார். அச்சமயம், மதுபோதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் எனக் கூறப்படும் கொட்டடியைச் சேர்ந்த ராமசாமி ராசு என்பவர் அந்த வாகனத்தின் மீது மோதினார்.

பிரஸ்தாப நபரைக் கைதுசெய்த பொலீஸார் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(க-3-203-204)


O/L, A/L தகுதியோடு நீங்களும்
Chartered Engineer ஆகலாம்.
யாழ். நகரில் City & Guilds London (U.K.)
நிறுவனத்தினர் நடத்தும் இலவச கருத்தரங்கு
பற்றிய விவரங்களுக்கு 14ஆம் பக்கம் பார்க்கவும்.
APSS International, Colombo.


## மரண அறிவித்தல்



### கார்த்தி கிருஷ்ணபிள்ளை
### (இராசமணி)

(முன்னாள் இ.போ.ச. சாரதி, பருத்தித்துறைச் சாலை)

இமையாணன் கிழக்கு, இத்தியோடையைப் பிறப்பிடமாகவும் குமாரியோடை, கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி - கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (26.04.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி - இலட்சுமி தம்பதிகளின் புத்திரனும் மாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும் சிறீதரன் (உரிமையாளர், தர்ஷிகா மணப்பந்தல்), இரவீந்திரன், ஜெயாதரன், சிறீமதி, வனஜா, யோகேந்திரன் (கணக்காளர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை), முரளீதரன் (சுவிஸ்), யசோதரன் (பட்டதாரிப் பயிலுநர், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பத்மாவதி, கௌரி, சுப்பிரமணியம் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), பிரபாகரன் (சுவிஸ்), பிறேமிலா (பட்டதாரி பயிலுநர், ஆசிரியை, வடமராட்சி மத்தி. மகளிர் கல்லூரி, நெல்லியடி), பிரியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரியோடை,
அண்ணாசிலையடி,
கரணவாய், கரவெட்டி.

(44711) (33-15-17)

தகவல்:-
குடும்பத்தினர்.


IBMS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I : 07.05.2005
பிரிவு II : 09.05.2005
பகல் 10.00 மணி
Diploma Courses
Dip in Microsoft Office
Dip in Internet Technology
Dip in Desk Top Publisning
Dip in Hardware Engineering
Dip in Visual Basic - Programming
Dip in Java Programming
01.05.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 50% கட்டணச் சலுகை
தலைமை அலுவலகம் : # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri



கணக்கீடு
திரு.N.சதீஸ் B.B.A.(FM.Spl.)
A/L 2006
கம்பனி
ஆரம்பம்
29.04.2005 Fri. 6.00a.m.
(44683) (33-15-17)
புகழ் கல்வி நிலையம்
தாவடிறோட், மானிப்பாய்.



G.A.Q. B.A
யாழ். பேராதனை
Tam. M.சுரேஸ்
H.C. திரு.MR
Po.Sc. T.திருமுருகன்
மெய்யியல் R.ஜெனகன்
ஆரம்பம்: 28.04.2005 - 4.00p.m.
(44677) (33-15-17)
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org